உ

சிவமயம்.

வைத்தியக்குறள்.

பழமொழிவிளக்கம் - 108,

இஃது,

கெழுமணவை சித்திரக்கவி

தேவேந்திரநாத பண்டிதரவர்களால்

இயற்றப்பட்டது.

இவை,

ஷை யார் சகோதரராகிய

சிறுமணலூர்

முனிசாமி முதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

கோ-செல்லப்பமுதலியாரவர்களால்

சென்னை,

[illegible]ரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[illegible] 1936. [அணா 8.

ரிஜிஸ்டர் காபிரைட்.

P. K. ராஜா புக் டெப்போ
P.K. RAJA BOOK DEPOT
K. SANNATHI,
KUMBAKONAM
சன்னதி, கும்பகோ[illegible]

முகவுரை.

[சி]வம் பதினெண் சித்தர்களா லியற்றிய பற்பல பாடல்களிலுஞ் சிற்சில செய்யுட்களைச் சேர்த்து சுலபமாயும், அதிவேகமாயும் அவ்வவ்வனுபோக முறைகளை ஒன்றாய்த்திரட்டி அகரவர்க்கமாய் 108-செய்யுளில் சிறியபுத்தகமாய்ச்செய்து இந்நூலிற்கு வைத்தியக்குறளென நாமகரணஞ்சூட்டி இதிலொவ்வொரு சீருக்குந் தனித்தனி முறைகளைப் பிரயோகித்து அதற்குநேராய் பழமொழிகளையும் புகட்டி சாராசாரமா அவிழ்தானுபோக சாரத்தை தக்கப்படியமைத்து உலோகோபகாரமாய் எல்லோரு முபயோகிக்கும்படி இதில் எனதனுபோகமுறைகளை யெடுத்துக்கூறியதில், நம்து தேசப் பரிகாரிகளுக்கும் இன்னுமற்றவர்களுக்கும் வெகு நன்மையைக் கொடுக்குமென இதை யியற்றலாயினேன். அன்றியும் இம்முறைகளைப் பிசகாது கைவல்லியமாய் அனுபோகப்படுத்து மியாவர்க்கும் தத்தம் கொள்கைக் கேற்ற பலன்களையளிக்குமென்ப தென்கருத்தாதலால் பலசமயத்தவர்களும் இதை ஏற்றுக்கொள்வார்களென மிகவும் நம்புகின்றனன்.

மேலும் இந்நூலிலுள்ள சாராம்ஸங்களை ஒன்றற்கொன்று தாழாது சமமாய் நிலைநாட்டி ஒவ்வொரு நாய்கட்குந் தக்கமுறைகளைப் பிரயோகித்து இடைக்கிடை இவ்வாறே பழமொழிகளையும் விளக்கியமைத்தது வெகுநன்மையெனக் கருதி யாவரும் நம்பிச் செய்து கையாண்டனுபவிக்க இதோர் பளிங்கு கண்ணாடியாய்த் துலங்குமென்பது ஸ்பஷ்டம் ஆயினும் இக்குறளடிச் சீரில் எக்குற்றங்க ளிருந்தபோதினும் வல்லவர்கள் மன்னிப்பராகவும், இந்நூலை ரிஜிஸ்டர் செய்திருப்பதால், என்னனுமதியின்றி யாதாமொருவரும் அச்சிறபற்றவும், மறுபாஷையில் மொழிபெயர்க்கவுங்கூடாது.

உ

கடவுள் துணை.

ரிஜிஸ்ட்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில, 1867-வது வருஷத்திய 25-வது ஆக்ட்டின் 20 - வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் இந்நூலை இங்கிலீஷ் இலாகாவாகிய மதராசிலும், பிரஞ்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்நூலுக்குடையவராகிய கோ. செல்லப்பமுதலியார் அண்டு கம்பெனியா ரவர்களின் உத்திரவின்றி இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தாலாவது அல்லது இதில் கண்டிருக்கிற பாகங்களையாவது ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல்செய்யப்படும்.

முக்கிய கவனிப்பு.

இப்புத்தகமாவது இன்னும் இதரமான புத்தங்களாவது அவிழ்தங்களாவது தேவையாளவர்கள் அடியில் கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கெழுதி பெற்றுக்கொள்ளலாம். கேட்லாக்தேவையானவர்கள் அரையணாஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

கோ—செல்லப்பமுதலியார் அண்டு கோ.

சௌகார்பேட்டை போஸ்டு மதராஸ்.

உ

சிவமயம்.

வைத்தியக்குறள்.

பழமொழி விளக்கம் - 108.

(முதற்பாகம்.)

காப்பு.

பிணியைக் கறுக்கிப் பீடையகற்றிடு
மணியாம் வைத்தியக் குறள்.

முதலாவது-கபரோகமற.

அரிதகியைக் கையானசாற் றரக்கியுண்ணு விரலில்
விரைவிற் றேய்கப மற்றிட.

அரிவையர் மூலைப்பாலருந்த வூன்சித்தி.

(இதன் கருத்து.) கடுக்காயைத் தூள்செய்து கரிசலாங்கண்ணிச் சாற்றில் ஆள்தூண்டிவிரல் நடுவிரல் இரண்டையும் அதிற்றேய்த்து அதன்பின் முன் கடுக்காய்த்தூளிற் றொட்டு உண்ணுக்கிற் புகும்படி அரக்கித் தேய்க்க, கபமானது கோழைகோழையாய்வந்துவிழும். மறுபடியும் இவ்வாறே நாலைந்து ஆவர்த்தி தேய்க்கவும். இது காயகர்ப்பவிதியாலொன்று. பழமொழி. மாதர்கள் மூலைப்பாலை தினந்தோறு முண்டுவரத் தேகமானதில் வலுவைத்தரும், என்பதாம்.

2-வது தாதுவலுவாக.

ஆப்பால் முந்திரிபருப்ப திற்கற்கண் டிம்மூன்றி
ராப்பா லுண் தாது வலுவாம்.

ஆவாரந்தழையும் ஆபத்துக்குதவும்.

இ - து. பசும்பாலில் முந்திரிப்பருப்பும் கற்கண்டும் சேர்த்து இம்மூன்றையும் இரவினில் மாருது வுண்டுவரவும், தாது வலுவைத்தரும், போகமதிகரிக்கும்படிச்செப்விக்கும், தேகம் குளிர்ச்சியாகும். (ப-ழி.) ஆவாரத்தழையானதும் ஆபத்திற்கு உதவும், எ-ம். 2

3-வது எலும்புருக்கிக்கு.

இலந்தையின்பட்டை யிடித்தறுகும் பாலிலரைத்
துலர்ந்த தேகத்தி னிற்குண்.

இரசப்பிடிப்பிற் கிடுங் காட்டுச்சிறுகீரை.

இ - து. இலந்தையின்பட்டையை நன்ருயிடித்து அதோடு அறுகம்புல்லையும் சேர்த்து பசும்பாலிலரைத்து இவ்வாறு ஒருவாரம் உண்டுவரவும், இச்சாபத்தியமாயிருக்க எலும்புருக்கி நோயான தகன்று தேகந் தழைத்து அதினுலுண்டாகும் துன்பமனைத்தும் நீங்கிவிடும். (ப - ழி.) இரசப்பிடிப்பிற்கு காட்டுச் சிறுகீரை வேர் - பச்சைக்கடலை - மிளகு - செம்மண் தணணீரிலூறப்போட்டுண்ணவும் அந்நீரைக் குடிக்கவும், அவ்வீரானது நீங்கிவிடும், எ-ம். 3

4-வது வங்கபஸ்பம்.

ஈயத்திற் பசரையின் னிலையரைத் தப்பில்
பாயப் புடமிடப் பஸ்பமாம்.

ஈச்சம்வேளிலைக் காடியேற்றச்சே யற்றுவிழும்.

இ - து. வங்கத்தைத் தகடடித்து அதின்மேல் பசரையிலையை யரைத்து அப்பிக் கவசஞ் செய்து

உலர்த்தி கஜப்புடத்தில் வைக்கவும் பஸ்பமாம். அப் பஸ்மத்தை அனுபான விசேஷத்திலளிக்க பலநோய் களுந் தீரும். (ப - ழி.) ஈச்சம்வேறும் அதினிலையும், காடியிலரைத்து அக்காடியிலேயே கலக்கி குடிப்பிக்க வும, வயிற்றிலுள்ள கர்ப்பமானது அற்றுவிழும். 4

5-வது உப்புச்செந்தூரம்.

உப்புப் பொடுதலையுங் கையான்சாற் றரைத்
திப்படிநாற் புடமிடச் செந்தூரம்.

உத்தாமணிப்பா லொழிக்கும் புண்சிரங்கை.

இ - து. சோத்துப்பில் பொடுதலைச் சாறும், கரிச லாங்கண்ணியின்சாறும் வார்த்தரைத்து உலர்த்தி இவ் வாறு 4-புடம்.5-கை விரட்டியிற் புடமிடவும் செந்தூர மாகும்..இதில் வெறுகடி அதாவது 3-விரல் கொண்ட அளவு காலை மாலை யுண்டுவரவும். உஷ்ணம், உஷ்ண வாய்வு, பித்தம், பித்தகுன்மம் வயற்றுநோய், சூலை நோய், மார்புநோய், சூலைமுதலியவைகள் தீரும், பத்தி யமில்லை. (ப - ழி.) உத்தாமணியின்பாலை புண்சிரங்கு-கால் கை வீக்கமேல்தடவிவர அவைகள் உடனே நீங்கிவிடும், எ-ம். 5

6-வது ஊழிபேதிக்கு.

ஊழியின் பேதிக்குன் மிளகாய் கறுக்கிநீர்
நாழிவிட் டெட்டொன்ருய் நாட்டு.

ஊழிநேரிட்டா லுருக்கிடுஞ் சத்தை.

இ - து. ஊழியின்பேதி அதாவது வாந்திபேதி க்கு மிளகாயைக் கறுக்கி அதில் ஒருபடிசலம்விட்டு ஆழாக்காய் காய்ச்சியிறக்கி அதை உள்ளுக்கேற்றிக் கொண்டுவரவும் அப்பேதி வாந்தி நின்றுவிடும். நிர்க் காவிடின் மறுபடியும் அதையே குடிப்பிக்கவும்-(ப-ழி.) இப்பேதியானது சம்பவித்தால் அவாள் தேகத்தி லுள்ள சத்தையுருக்கி இந்திரியமுதலியதை வெளியில் விடுக்கும், எ-ம். 6

7-வது அண்டவாதத்திற்கு.

எழிற்கருஞ் சீரகம்வெண் பூண்டுந் தேனிலரைத்
திழியண்ட வாதத்திற் குண்.

எந்தவீக்கத்திற்கு மெருக்கின் பாலடி.

இ - து. கருஞ்சீரகமும் வெள்ளைப்பூண்டுந் தேனிலரைத்து காலைமாலை இரண்டுவேளையு முண்டுவரவும், இப்படி ஒருவாரமுண்ண அண்டவாதமானது தீரும், இச்சாபத்தியம்வைக்கவும். (ப - ழி.) எருக்கின்பாலை எவ்விதவீக்கம், பக்கச்சூலை, சுளுக்கு, தேகநோக்காடு இவைகளின்மேல் தடவி அதின் வேறருகிலுள்ள மண்ணை அதின்மேற்போட்டு வரவும் அவைகள் தீரும், எ-ம். 7

8-வது பேதிக்கெண்ணை.

ஏரண்டத் தெண்ணையிற் கரண்டிக்கால் படிமோர்
நேரவுட் கொள் பேதியாம்.

எந்திழைக்கீறுள்ளி யேற்றமுலைப்பாலே.

இ - து. ஆமணக்கெண்ணை ஒரு கரண்டியை கால் படி மோரிற்கலக்கி அதிகாலையிற் குடித்துவிடவும், நன்றாய்ப்பேதியாகும், இதில் சிலநோய்களுந்தீரும். ஒருவேளை பேதியதிகப்படின், வசம்பைக் கரிக்கி வெந்நீர் அல்லது கஞ்சித்தண்ணீரில்போட்டுக் கலக்கிக் குடிக்க அப்பேதியுடனே நின்றுவிடும். (ப - ழி.) பாலில்லாத மாதர்களுக்கு வெள்ளைப்பூண்டைப்பிரயோகித்து பதார்த்தவகைகளிலுஞ் சேர்த்து உள்ளுக்கேற்றிவரவும், அவாளுக்குப் பாலானது அதிகமாய்ச்சுரக்கும், எ-ம். 8

9-வது எலிகடிக்கு.

ஐபந்திரி பறவன் றறுமூன் றெலிகடிக்கு
நையவான் பூனைமல முண்.

ஐவேலிக்காயு மாணுரைக்காக்கும்.

இ - து. சந்தேகமற 18-விதமாகிய எலிகடிகட்கு ஆண்பூனை அதாவது கரும்பூனை மலம், அல்லது எலியின்மலம் இவைகளிலொன்றை தூள்செய்து வாழைப்பழத்தினுள்வைத்து மூடி வாயிற்போட்டு மென்றுதின்னவும், இவ்வாறு 3-நாளுண்ண அதின் விஷகோர மடங்கி சுகுணமாய்விடும், கடும்பத்தியம் வைக்கவும். (ப - ழி.) ஐவேலங்காயானது சிவபிரானையுங் காப்பாற்றும், எ-ம். 9

10-வது சர்வதோஷத்திற்கு

ஒடுங்குங்கடியம்மை யொட்டுநோய் தோஷபிணி
விடும்வேப் பிலைநீர் மேற்றெளி.

ஒட்டியபுண்ணை யொடுக்கு மல்லிகைப்பூ.

இ-து. விஷக்கடி அம்மை ஒட்டுநோய்கள் தோஷங்கள் பிணிகள்முதலிய சர்வதோஷத்திற்கும் வேப்பிலையைத்தண்ணீரில் நனைத்து சுழட்டி மந்திரித்தாகிலும் அல்லது சும்மாவாகிலும் அவாள்முகத்தில் விசிரியடிக்கவும், அன்றியும் வேப்பிலைக் காற்றுபட்டாலும், அம்மரநிழலிலிருந்தாலும் அதினால் விசிரினாலும் மேற்சொல்லிய வினைத்துந்தீரும் இதை அம்மன்பத்திரியென்றுஞ் சொல்லுவார். (ப-ழி.) ஒட்டியபுண் அல்லது நரம்பு சிலந்திக்கு மல்லிகைப்பூவை மேல்வைத்துக் கட்டவும் இலகுவாகும், எ-ம். 10

11-வது நீரிழிவிற்கு.

ஒட்டியிடித் தென்னுட் பனைவெல்லத்தில்
நாட்டிடு நீரிழிவு நலம்.

ஓரிதழ் தாமரை யுண்ணப் பிலனுண்டாம்.

இ - து. எள்ளை ஆழாக்கில் கல்மண்ணில்லாது நோம்பி அதில் பனைவெல்லஞ்சேர்த்து இடித்து காலைமாலை இரண்டுவேளையும் எலுமிச்சம்பழவீத முட்கொ

ண்டுவரவும் நீரிழிவு சுவஸ்தமாகும், இச்சாபத்தியும். ஒருவேளை நீரைக்கட்டிவிடின் நாட்டுச்சர்க்கரை யுட்கொள்ளவும் நீர்தாராளமா யிறங்கும். (ப - மி.) ஓரிதழ் தாமரை அல்லது - ரத்தினபுருஷ் - புருஷரத்தின மென்பர், அதைசுண்டயிடத்தில் காலையிற் பிடுங்கித் தின்றுவரவும் இந்திரிய புஷ்டி, தாதுவிருத்தி ஆண் மையில்லார்க்கு லேபணத்தைத்தரும், எ-ம். 11

12-வது பசியகல்வதற்கு.

ஔவையின் மூலியன் றமுகி லடைசுட்டுச்
 செவ்வை யுண்ணப் பசியறும்.

ஔவையின் மூலியாண்டிகள் கர்ப்பம்.

இ-து. ஔவையின் மூலியாவது கஞ்சா, அதைப் பசுவின் பாலிலவித்து நன்றாய்ச் சுத்திசெய்து அதற்குச்சமன் புழுங்கலரிசிசேர்த்து அரைத்து அடைசுட்டு இரண்டொரு அடை தின்னவும் அதுமுதல் ஒருவாரத்திற்கு பசியெடுக்கமாட்டாது. அதன்பின் பேதிக்குச் சாப்பிட அதுவெளிபட்டு பசியெடுக்கும் இதை கோரக்கர்மூலியென்றுஞ் சொல்லுவர். (பழமொழி.) ஔவையின் மூலியென்பது. ஆண்டிகள் தம்மடிக்கும் கல்ப்பம், எ-ம். 12

13-வது நாக்குப்பூச்சிவிழ.

அஃகத்திற் றேங்காயை யன்றவித்துச் சேய்க்கீயச்
 சிக்கெனப் பூச்சி சிதறும்.

அஃகத்திற் கென்னுளை மலையுமூலகம்.

இ - து. அஃகமென்பது நெல்லு அதில் ஒரு தேங்காய்பத்தையைப்போட்டு வேலித்து அதை இறக்கியபின்னெடுத்து சிறுபிள்ளைகட்களிக்கவும், அதைத் தின்றவுடனே பேதியாகி அதில் நாக்குப்பூச்சிகள்வந்து விழும் அதினுலுண்டாகிய கொடூரமனைத்தும் நீங்கி விடும். (ப - மி.) அஃகமாகிய தானிய வமுதுபடிக்கு இவ்வுலகத்திலுள்ள சனங்களியாவருஞ் சம்பாதிக்க அலைவார்கள், எ - ம். 13

14-வது மேகத்திற்கு.

கற்றாழைக் கர்ப்பமங்கண்டதிக காலையி லுண்ணப்
பற்றாது மேகம் படும்.

கண்டது கடிபதுண்ணு கஞ்சாங் கோரைவார்.

இ-து. கற்றாழை மடலைதினந்தோறும் அதிகாலையில் ஒவ்வொன்றைத் தின்றுவரவும் அதில்மேகமானதகலும், தேகவழற்சியை நீக்கும், இன்னுஞ்சிலநோய்களையும் பற்றறுக்கும் பத்தியமென்பதில்லை. இதுகாயகர்ப்பங்களிலொன்று. (ப-ழி.) தாயானவள் எவ்விதஆகாத வஸ்துக்களைத்தின்றபோதிலும் குழந்தைகட்கு மாத்திரம் கஞ்சாங்கோரையைப் புட்டிட்டுவார்த்தாலும்சரி, அல்லது வேறெவ்விதமாகப் பிரயோகித்தாலுஞ்சரி அவைகட்கு யாதொரு நோயுமணுகாது,எ-ம்.

15-வது திரிகடுகின்குணம்.

ஙப்போலத் திரிகடுகு நன்றாய்ப் பலசரக்கி
லெப்போதுங் கூடி யிசையும்.

ஙவ்வெழுத்தைப்போல நடுநின்று போர்செய்யும்.

இ - து. ஙகரவெழுத்தைப்போல திரிகடுகாகிய சுக்கு, மிளகு, திப்பிலி, இம்மூன்றும் எல்லாமருந்துபாகங்களிலும் சஞ்சரித்துக்கூடிவரும், இதுமெய்யெழுத்தாகிய (ங்) என்றுகொள்ளவும், (ப-ழி.) இந்த ஙவ்வெழுத்தைப்போல் நீயாதொன்றிலும் நடுவில் நின்று போர்புரியக்கடவாய், எ - ம். 15

16-வது விக்கலிற்குத் தூள்.

சந்தனக் கட்டையிற் றங்கச்சாம்பிராணியுஞ்
செந்தணலிட்டுப் பொடித்துண்.

சர்த்தி விரோசனத்திற் றுக்குமேனிச்சார்.

இ - து. சந்தனக்கட்டையும் பளிங்கு சாம்பிராணியும் வெவ்வேறாய்த் தணல்பட இளவறுப்பாய் வறுத்து அதையார்க்கப் பொடித்துவெறுகடி அதாவது(மூன்று

விரல்கொண்டபிரமாணம்) உண்டுவரவும். சர்த்தியாகிய வாந்தியும், விரோசனமாகிய பேதியும் நின்றுவிடும் வரையிலும் ஓர்மணிக் கோராவர்த்தி யுட்கொள்ள தணிந்துவிடும். (ப-ழி.) வாந்தி அல்லது பேதிக்கு குப்பைமேனிச்சாற்றைப் புகட்டவும் அக்கொடூரங்கள் நீங்கும், எ-ம். 16

17-வது மருளிற்கு.

ஞயமாகச் சுன்னத்தில் நற்சோப்பினை யிழைத்து
இயல்பா கவை யெடுக்கும்.

ஞயவஞ்சகமற நற்றேங்கா யெண்ணெயிடு.

இ-து. ஞகரவெழுத்தைப்போல தாம்பூலத்திற் போடுஞ் சுன்னத்தில கொஞ்சம் சுண்ணம்பு சோப்பை வைக்க அதுசற்றுநேரத்திற்கெல்லாம் கரைந்துவிடும், அதிற்கொஞ்சமெடுத்து தேகமாதியந்தமும் மருளிருப்பவர்களுக்கு முதலில் எவ்விடத்திற் கிளம்பியதோ அதையறிந்து அதின்மேல்வைத்து மற்றமருள்களுக்கு அதன் பின்னல்வைக்க யாவுங் கரைந்துவிடும் அதைப்பார்த்திருந்து தட்சணங் கழுவிடவும், (ப-ழி.) அப்பால் தேங்காயெண்ணெ யிட்டாற்றவும், எ-ம். 17

18-வது காதுநோய்க்கு.

இடரில்லாப் பூண்டும் மிளகுவேளைச் செவியி
லிடகீழ் நோய்குத்த லறும்.

இடர்நாபி முறிவு திடம்நாவற் கொழுந்து.

இ-து. வெள்ளைப்பூண்டும் மிளகும் நசுக்கி வேளையிலையில்வைத்து அதைநன்றாய்க் கசக்கிக் காதிற் பிழியவும் கொஞ்சநேர மெரியும் அதன்பின் குளிர்ந்துவிடும். அதில் காதுநோய், குத்தல், கூவுதல், சீழ்வருதல் யாவுந்தீரும், இதையே இரண்டொருவேளை பிழியவும். (ப-ழி.) நாபியைத் தின்றவர்க்கு நாவற்கொழுந்தின் சாற்றைப்புகட்டவும் முறிந்துவிடும், எ-ம். 18

19-வது மகோதரத்திற்கு.

இணங்கப் பீர்க்கன்காய் சாறினிற் பெருங்காயமதும்
வணங்கவுண் மகோதரம் போம்.

இணங்கிய சிவனார் வேம்பிற்கிடு சுக்கு.

இ - து. பீர்க்கங்காயை யிடித்துச் சாற்பிழிந்து அதில் பெருங்காயஞ் சேர்த்து உண்டுவரவும் மகோதரம், பெருவயிர்' நீராம்பல், நீர்க்கோர்வை முதலியவைதீரும்' வறுத்தவுப்பு சுட்டபுளிகூட்டவும். ப-ழி.) சிவனார்வேம்புத் தின்றவர்க்கு சுக்குகியாழமிட்டுக்கொடுக்கவும் முறிவாகும், எ-ம். 19

20-வது காமாலை தீர.

தக்கவே நெல்லித் தன்சீரக மிரண்டும்
ஒக்கவே தூளிடித் துண்.

தப்பாப் பேச்சுரைக்குத் தாக்குமுத்தக்காசு.

இ - து. நெல்லிக்காய் வற்றலும் சீரகமும் உலர்த்தித் தூளிடித்து உண்டுவரவும், ஒருவாரம் இருவேளையுங் கொள்ள காமாலை, சோகை' பாண்டுமுதலியவை தீரும். வறுத்தவுப்பு, சுட்டபுளி கூட்டவும். (ப - ழி-) பேச்சுரையைத் தின்றவர்க்கு கோரைக்கிழங்கை யரைத்துப் புளிச்சைத் தண்ணீரிற் குடிப்பிக்கவும் முறிவாகும், எ - ம். 20

21-வது நளிர் சுரத்திற்கு.

நண்டிடித்தச் சாறு நளிர்சுரத்திற் கேற்றிடவே
விண்டுமே யேகி விடும.

நத்தைச்சூரி யெத்தைச்சொன்னாலுங் கேட்கும.

இ - து. கழனிகளிலுள்ள நண்டுகளை யிடித்துச் சார்பிழிந்து அதைதக்கபடி சாறுகாச்சி காலை மாலை இருவேளையும் மூன்று நாள் உள்ளுக்கேற்றிவர. தீராத, நளிர்சுரங்கள், ஒழிந்துவிடும், வறுத்தவுப்பு, சுட்டபுளி கூட்டவும். (ப-ழி.) நத்தைச்சூரி யென்பது, தொண்

டிப்பூண்டு, அச்செடியை மிதித்துக்கொண்டு பகலில் வானத்தைப்பார்க்க நட்சத்திரங்கள் தெரியும்படியானு செடிதான், அது எல்லா வேலைகளையுஞ் செய்விக்கும்.

22-வது பார்வை யுண்டாக.

பற்பாடகச் சாற்றைப் பற்றித் தலைதேய்க்கில்
நற்பார்வை யாகும் நயனம்.

பத்துமிள கிருக்கப் பகைவன் வீட்டுண்ணலாம்.

இ - து. பற்பாடகத்தை யிடித்துச் சார்பிழிந்து அதில் பசும்பால் சேர்த்தாகிலும் அல்லது சும்மாவாகிலும் சாலேசுரம், கண்மத்திபம், கண்தெரியாதவர்கள், தலையில் அறக்கித்தேய்த்துத் தலைமுழுகிவரவும், இப்படி ஏழெட்டுமுழுக்கில் பார்வைநன்ருய்த்தெரியும். (ப - ழி.) பத்துமிளகு வைத்துக்கொண்டு பகைவர்வீட்டில் விருந்துண்ணப் பயமில்லை, எ-ம். 22

23-வது கர்ப்பவேதனைக்கு.

மண்ணிற் பூநாகம் வைத்து வெற்றிலையினிற்
திண்ணிற் ருன்பிர சவிப்பர்.

மஞ்சட்காமாலைக்கு வார்வேளைச் சார்பிழியில்.

இ - து. நாக்குப்பூச்சியை மோரிற்போட்டுவைக்க பண்ணைககக்கிவிடும், அதை வெற்றிலையில் வைத்து மடித்துச் சுருட்டிவாயிற்போட்டு மென்றுதின்னவும் அக்கர்ப்பிணி உடனே பிரசவிப்பள். (ப - ழி.) மஞ்சட்காமாலைக்கு வேளைச்சாற்றை கண்ணிற்பிழிந்துவரவும், அதுமாறும், நல்வேளை, வெள்ளைப்பூ, நாய்வேளை, மஞ்சட்பூ வுள்ளது, எ - ம். 23

24-வது இருமலுக்குக் கியாழம்.

இயல்பாகத் துத்தியிலைக் கியாழங் கற்கண்டும்
நயமாய்க் கொள்ளிரும லறும்.

இயல்பா யலரிவேர்க்கிடுங் கடுக்காய்கரி.

இ - து. துத்தியிலையைக் கியாழமிட்டு அதிற் கற்கண்டு சேர்த்து காலைமாலை குடித்துவரவும், இருமல் தீரும், இன்னும் கண்டங்கத்திரிவேர், கருப்புப்பூளைக் காஞ்சிவே ரிவைகளையு மிவ்வா றுண்டுவரவும், இருமல் நின்றுவிடும். (ப - ழி.) அலரி வேரைத் தின்றவர்க்கு கடுக்காய் கரியைக்காடியிற் கரைத்துக் குடிப்பிக்க முறிந்துவிடும், எ - ம். 24

25 - வது இருதுவரச.

அரமெனக் கொள்ளை யவித்தாவியிற் காயந்
திரமெனக் கொள்ள ருதுவாம்.
அரவந்தீண்டிடி லழுஞ்சிவேர் பட்டையிடு.

இ - து. கொள்ளை வேவித்து அவ்வாவியில் பெருங்காய மரைத்துக் கலந்து அத்தண்ணீரைக்குடித்து கொள்ளைத் தின்னவும், இரண்டு மூன்று பொழுதில் அந்தப் பெண் ருதுவாகும், அப்படி ருதுவாகாவிடின் மறுபடியும் அவ்வாறே கொடுக்கத் திரளுவள். (ப - ழி.) பாம்புகடித் திறந்தவர்க்கு அழுஞ்சிவேர் பட்டையை காடியிலரைத்து அக்காடியிற் கலக்கிக்குடிப்பிக்க விஷமீளும், எ - ம். 25

26 - வது நாவாரோக்கியத்திற்கு.

இலவங்கஞ் சாபத்திரி சுக்கேலம் வால்மிளகும்
பிலங்காண். தாம்பூலத் திடு.

இலந்தைக் கொழுந்தி லேகுங் கண்ணெரி.

இ - து. இலவங்கம், சாபத்திரி, சுக்கு, ஏலம், வால்மிளகு, இவைகளைக் தாம்பூலத்துடன் தரித்துக் கொள்ளவும். பலம் இந்திரியவிர்த்தி, தேககாந்தி, தீபனசக்தி, முகவசிகரத்தைத் தரும் (ப - ழி.) இலந்தைக் கொழுந்தை யரைத்து பசும்பாலிற் குழப்பி தலையிலப்பிவைத்து பிறகு குளித்துவரவும் கண் துலக்கமாய் பிரகாசத்தைத் தரும், எ - ம். 26

27 - வது உன்மத்திற்கு.

வளமாகக் கொன்றை விரைத்தைலம் நசியம்பண்
ணுளவா யுன்மத்த மோடும்.

வங்கமுண்ணத் தங்கம் பின்னப்பட பங்கம்.

இ - து. கொன்றை விரையைக் குழித்தைல மிறக்கி அதிற் கொஞ்சம் நாசியில் நசியம் பண்ணவும், உன்மத்த மென்னும் மோணநோய் நீங்கிவிடும், உன்மத்தமாவது - யாதொன்றிலும் பிரவேசிக்காது சும்மாய்ப் பேசாமலிருப்ப தெனக் கொள்க. (ப - ழி.) வங்க பஸ்பம் சத்தில்லாது தவளமாயிருப்பதை யுண்ணதேக மானது பொன்னிரமாம் சத்திருப்பது அல்லது பத்தியப்பரிகாரத்திற் பின்னப்படுவது பங்கமாம், எ-ம். 27

28-வது அழலிற்கு.

அழல்கொண்டகூட்டிற் கதிமதுரப் பாலுண்ணச்
சுழன்றேடிப்போ யொடுங்கும்.

அழற்பித்த மாற்றும் பழத்துள்ளிலந்தை.

இ - து. அழல்கொண்ட கூட்டினுல் இரும்பலான துண்டாயின் அதற்கு அதிமதுரப்பாலானதை வாயிற் போட்டுச் சப்பி அச்சாரத்தை விழுங்கிவர அந்நோய் விரைவில் அகன்றுவிடும். (ப - ழி.) அழற்பித்தத்தைத் தணிப்பதற்காக இலந்தைப்பழங்களைத் தின்றுவரவும் அப்பித்தமானது தணியும், எ - ம். 28

29-வது பாலதோஷத்திற்கு.

இளம்பிரை தங்கத்தினி விடுஞ் சேய்கழுத்
தளவு மூன்றும் பிரையிற்றறி.

இளம்பிரை கட்டக் கிளய்பிடுந் தோஷம்.

இ - து. அமாவாசை கழித்த திரிதிகைதிதியின் அந்திநேரத்தில் தங்கதகட்டிர் மூன்றும் பிரைஜனிக்கையில் அப்பிரையைப்பார்த்து அவ்வேளை அப்பிரையைப்போல தகடடித்து கத்திரித்து காதுபற்றவைத்து

தோஷம்பிறந்துள்ள குழந்தைகள் கழுத்தில் கட்டிவிட அப்பால் அத்தோஷங்கள் பற்றரும். (ப - ழி.) இளம் பிரையாகிய மூன்ரும் பிரையைக்கட்ட தோஷமனைத் தும் நீங்கிவிடும், எ-ம். 29

30-வது கண்நோய்க்கு

அரப்பொடி பழத்திட்டச்சார் கண்ணிற் பிழிய
திறமாய்க் கண்ணோ யறும.

அரணைக்கடியையாற்றுஞ் சிறுகுறிஞ்சான்.

இ - து. எலிமிச்சன் பழத்தை இரண்டா யறுத்து ஒருபத்தையுள் அறப்பொடித்தூளைப்போட்டு சற்றுநே ரம்பொறுத்து இருகண்களிலும் பிழியவும் இப்படி இர ண்டொரு வேளையில் கண்ணோயானது நீங்கிவிடும். சிவந்தநிறமு மாறிவிடும். (ப - ழி.) அரணைகடித்தால் மரணம், அதையகற்ற சிறுகுறிஞ்சான் இலையையரை த்து அக்கடிவாயிற்பூசி உள்ளுக்குங்கொஞ்சமுண்ணவு மாறும், எ - ம். 30

31-வது சொரிக்கு.

அனந்தமாய்ப் பூவரச னதின்பட்டைத் தூள்
கனமாய் நீராகாரத் துண்.

அனந்தநஞ்சதனிற் கருந்தும்வெள் வேலை

இ - து. நூறுவருடஞ் சென்ற பூவரசன்பட்டை யைமேற்பரணிபோக்கி இடித்து வஸ்திரகாயஞ்செய்து நிசித்தண்ணீரிற் கொஞ்சம்போட்டுக் கலக்கி ஒருவாரம் காலையிற் குடித்துவரவும், சொரிசிரங்கு, மேகப்படை யாவுந்திரும். (ப - ழி.) எல்லாநஞ்சினுக்கும் வெள் வேலம் பட்டையைப் பொடித்து சூரணஞ்செய்து புளிச்சத்தண்ணீரில் குடிப்பிக்கமுறியும், எ-ம். 31

32-வது கற்பூர சிலாசித்து பஸ்மம்.

சற்பூர சித்தினிற் கப்பி வெந்தயத்தை
நற்குக்கிடம் வைத் தெடு.

கற்பூரவல்லியிற் கனிவாழைப் பஸ்மமாம்.

இ - து. கற்பூரசிலாசித்துக்கு வெந்தயத்தைத் தண்ணீரி லூரவைத்து அரைத்து அதிற்கவசஞ் செய்து கரு எருவிற் புடமிடவும் பஸ்மமாம், இதில் தம்படியிடை அரையாழாக்குப் பசும்பாலிற்போட்டு ஐந்துநாட் காலையிற் குடித்துவரவும், தேகவழற்சி, வெட்டை, வெள்ளை, இருமல், இரைப்பு, வயர்வலி முதலியவைதீரும், இச்சாபத்தியம். (ப - ழி.) கற்பூர வல்லியிலையில் இரண்டிலையை வாழைப்பழத்துள் பதிந்து பத்து எருவிற் புடமிட பஸ்மம், எ-ம். 32

33-வது சங்குசுன்னம்.

கார்நிறத்தோன்பூண்ட துழாய்க் கங்கவசஞ்சங்கிலையி
லோர் குக்கிடம் வைத்தெடு.

காலஞ்சென்ற வசமபு கனவசநாபி.

இ - து. மேகநிறத்தையுடைய மகாவிஷ்ணு யணியப்படாநின்ற துளசியை யரைத்து பாலடையாகிய சங்கினுக்குப் பதிந்து கவசஞ்செய்து குக்கிடப்புடம். அதாவது 10-எருவிற் புடமிடவும் பஸ்மமாம், அதில் சுண்டைக்காயளவு தேன், நெய், வெள்ளைசர்க்கரை, அனுபானத்திலிடவும் பலவினைகளும் பற்றறும் (ப-ழி.) வசம்பு 12-வருஷம் 12-இடத்தில் பிடுங்கி நட்டுவருவது வசநாபி, எ - ம். 33

34-வது கல்லடைப்பிற்கு.

கிட்டுமீருள்ளிச் சாரிற் கழற்சிவேர் சாரும்
விட்டுழக் கொன்றாகவுண்.

கிராணிக் கழிச்சற் கிடுமாதளைப் பிஞ்சை.

இ - து. வெங்காயச் சாறும் கெச்சைக்கா யிலைச் சாறும் ஒன்றாய்க்கலந்து உழக்குவீதம் வெடிகாலையி லுண்டுவரவும், கல்லடைப்பானது புரண்டு வெளிப்

பட்டு தடைபடாது நீரிறங்கும். (ப - ழி.) கிராணிக்கழி ச்சலிற்கு மாதளேப்பிஞ்சைத் தின்னுவரவும் நிற்கும், சீதபேதியையுங் கேட்கும், எ - ம். 34

35 - வது பித்த சோகைக்கு.

கீரைப்பிடி முள்ளங்கிக் காம்பின்சா றுழக்கிற்
சேரப் பலந்தேனி லுண்.

கீரிப்பூச்சிக்கிடு முருங்கிலேச்சார்.

இ-து. முள்ளங்கியிலேயின் காம்பு நரம்புச்சாறு, உழக்கில் ஒருபலந் தேன்விட்டுச் சாரித்து அதிகாலேயி லுண்டுவரவும், பித்தசோகையானது நிவர்த்தியாகும், வறுத்தவுப்பு சுட்டபுளி கூட்டவும். (ப - ழி.) கீரிப்பூச்சி வாதைக்கு முருங்கிலேச்சார் புகட்டவும், அப்பூச்சிகள் மலத்தில் வெளிப்பட்டு வந்துவிடும், எ-ம். 35

36 - வது குன்மகட்டிக்கு.

குன்மவலிக்குத்தும்பைக்கொய்துச்சாருண்டிடவே
நன்மையாம் நாட்டு ளோர்க்கே.

குதிரைக்குளம்புச்சார் கொடியகட்டிக்கிடு.

இ - து. தும்பையிலேயை ஆய்ந்து இடித்துச்சார் பிழிந்து மூன்று நாள காலேயில் குடித்து வரவும், குன் மககட்டி, குன்மவலி யாவுந்தீரும், கடும்பத்தியம் வைக் கவும். (ப - ழி.) குதிரைகுளமபுச் சாத்தைக் கட்டி களின்மேல் தடவிவரவும உடைந்துவிடும், அல்லது அவ்விலேயை வேவித்து மேறபடி கட்டியின்மேற் கட் டிக் கொண்டு வரவும உடைந்து மூளே முதலியதும் வெளிப்பட்டு விடும், எ - ம். 36

37 - வது கண் குளுத்திக்கு.

கூவிளம்பழத்தைக் கொதிப்பித் தெள்ளெண்ணேயினிற்
ருவித் தலேமுழுகுந் தரம்.

கூறிய சிலந்திக்கிடுந் தேள் கொடுக்கிலே.

இ - து. வில்வப்பழத்தை விறைபோக்கி அதின் சதையை நல்லெண்ணேயிற் கலக்கி அதற்குசமன, பசும

பாலுஞ் சேர்த்துக் காச்சி பதத்திலிறக்கி வடிகட்டி வாரத்திற்கிருமுறை தலைமுழுகிவரவும், கண்குளுத்தியாய் பார்வை யுண்டாவதுமன்றி, தேகவழலையும்போக்கும். (ப - ழி.) சிலந்திகடிகட்கு தேள்கொடுக்கிலைச் சாற்றைப் பூசிவரவுந்தீரும், அல்லது அச்சாற்றை நல்லெண்ணெயிற் கலந்து, உடம்பிற்றுவாலையிட்டு கொஞ்சங் குடித்துவரவும் மாறிவிடும், எ - ம். 37

38-வது சீதபித்தத்திற்கு.

கெட்டி யதிமதுரங் கிஞ்சும்பற்பாடகச் சார்
நெட்டிக் கியாழ மிட்டுண்.

கெந்தியே நாதம்விந்துவே சூதம்.

இ - து. அதிமதுரத்தைப் பற்பாடகச்சாற்றிற் கலந்து கியாழமிட்டுக் குடித்துவரவும். சீதபித்தமானது தீரும வறுத்தவுப்பு சுட்டபுளிகூட்டவும், அக்கியாழத்திற் றேன்கலக்கலாம். (ப-ழி) கெந்தியென்பது நாதமென்றும், சூதமென்பது விந்துவென்றும் சொல்லப்படும், எ - ம். 38

39-வது இருவாய்க்கட்டிற்கு.

கேளுந் துருஞ்சிப்பட்டைக் கிண்டிவெந்நீரி லுண்
ணுமிரு வாய்கட் டறும்.

கேசரிப்பால் சேய்க்குக்கிட்டிடச் சூடாக்கும்.

இ - து. துருஞ்சிப்பட்டையைக் கிண்டிவெந்நீரிற் குடித்துவரவும் இருவாய்க்கட்டாகிய, மலசலக்கட்டு மாறி மலம்சுவாபீகமாய்ப் பிரவிர்த்தியாகும் இதை இரண்டுமூன்றுநாள் உட்கொள்ளவும், வெகுநன்மையைத் தரும். (ப-ழி.) கழுதையின்பாலை குழந்தைகட்கு மூன்றுநாள் வார்த்துவரவும். சூட்டைத்தரும், குளிர்மை, செவாப்பு, கருமேகமுதலியவைதீரும், எ - ம். 39

40-வது தலைவலிக்கு.

கைப்பாகும் நாய்ப்பாகல் சார்திரி மூக்கில்
வைப்பாய் புகையா யது.

கையான்சார் சோகைக்குக் காலமே யேற்றிடு.

இ-து. நாய்ப்பாகல் சார்பிழிந்து அதில் சல்லா துணியைத்தோய்த்து உலர்த்தி மறுபடியும் நனைத்துவுலர்த்தி இப்படி ஐந்தாறுவிசைசெய்து அதைத்திரி திரித்துக் கொளுத்தி மூக்கிற் புகைபிடிக்க உடனே தலைநோய நின்றுவிடும். (ப-ழி.) கரிசலாங்கண்ணியிலையில், கொஞ்சம் மிளகும், பூண்டும், வைத்து அரைத்து எலுமிச்சம் பழவீதம் மூன்றுநாட் காலையிற்கொள்ளவும்தீரும், எ-ம். 40

41-வது குட்டத்திற்கு.

கொன்றைவிரைத்தைலங் கொண்டிறக்கும்பூமிபுடம்
அன்றதன் மேற்பூச நாடா.

கொன்றைபட்டையிற் கோடிவியாதிபோம்.

இ-து. கொன்றை விறையானதைபூமியிற் பள்ளம்வெட்டி குழித்தைலமாயிறக்கி அத்தைலத்தை குட்டம்பிடித்தவர்களின் கைகால்களிலுள்ள ரிணத்தின் மேற்பூசிக்கொண்டு வரவும் அவ்விரணங்கள் மாறிவிடும். (ப-ழி.) கொன்றைப்பட்டையின் சூரணத்தை, உட்கொள்பவர்க்கு அனந்தவியாதிகள் அகன்றுவிடும்.

42-வது வாதந்தீரப் பேதிக்கு.

கோவைக் கிழங்கின்சாரும் விளக்கெண்ணை ரசம்
வேவச் செய்துட் கொள்ளுமே.

கோழையை யறுக்குங் குப்பைமேனிச்சார்.

இ-து. கோவைக்கிழங்கு அல்லது அதின்பெருங்கொடியைக் கணுவுகளை யகற்றி நடுகண்டங்களை நறுக்கி தண்ணீர்விட்டுக்காச்சி அதிற்பாதி விளக்கெண்ணை விட்டு மிளகுநீர்போல உப்பு புளி மிளகாய் திட்டமாய்க்கூட்டி தாளிதஞ்செய்து அந்தரசததைக் குடிக்கவும், பேதியாம், அதில்வாதம், விம்மல், வீக்கம், வலி முதலிய தியாவுமகலும், (ப-ழி.) குப்பைமேனிச்சாற்

றைக் குழந்தைகட்கு வார்த்துவரவும் அதினல் கோழை களை யறுத்துத் தள்ளும், எ - ம். 42

43-வது பித்தந்தீரப்பொடி.

சர்க்கரையுஞ் சீரகமுந் தன்நெல்லி முள்ளியறும்
சுக்கேலந் தேனிழைத் துண்.

சன்னிக்கு வன்னிதாக்குங் கஸ்தூரி.

இ - து. சீரகம் நெல்லிமுள்ளி சுக்கு, ஏல, இவை களைச்சூரணஞ்செய்து. சர்க்கரைகலந்து, தேனிலிழை த்து, வெறுகடிவீதம் இரண்டுவேளை அரைமண்டல முண்டுவரவும், பித்தத்தினலுண்டாகிய கொடூரமனைத் தும், நீங்கிவிடும், (ப-மி.) சன்னியானது கண்டபொ ழுது கஸ்தூரியைப் பிரையோகிக்கவும், எ - ம். 43

44-வது குன்மத்திற்குச் சூரணம்.

சார்பாய்ச் செருப்படியுந் தன்கையான் மேனியுமே
ஓர்வாய்ப் பொடி யருந்துள்.

சாரத்திற் காரத்திற் சரக்கினை நீற்றிடு.

இ - து. செருப்படையும், கரிசலாங்கண்ணியும், குப்பைமேனியும், இம்மூன்றையும் சூரணஞ்செய்து அதிற்சர்க்கரைசேர்த்து உண்டுவரவும் குன்மமானது அகலும் இச்சாபத்தியம், இருபதுநாள் காலைமாலை சாப்பிடவும். (ப - மி.) காரசாரத்தினல் எவ்விதச்சரக்கு களையும் கட்டவும் பஸ்மிக்கவும், செந்தூரிக்கவும், சுன னஞ்செய்விக்கவு, முக்கியமானவை, எ - ம். 44

45-வது தலைப்புத்திற்கு.

சித்திநிலக் கடம்பைச் செம்பசும் பாலிலரைத்
தொததிவைத் திடு சிரத்தில்.

சிறியாநங்கைபறியான் சீறியநாகங் கட்டான்.

இ - து. நிலக்கடம்பை பசும்பாலி லரைத்து மூன்று தினம் தலையில் அப்பிவைத்துக் கட்டவும்

தலைப்புத்தானது மாறிவிடும், அதிலுள்ள கிருமிகளியாவும் வெளிப்பட்டு நசிங்காவிடும், (ப - மி.) சிறியாநங்கையிலை யறியாதவன்சீறிடும் வெண்ணைக்கையும், பாம்பானதையும் கட்டமாட்டான். அச்சிறியா நங்கை சிறியமிளகாய்ச் செடிபோலும், கசப்புள்ளதாகவும் கொடுக்காபுளியிலையைப்போலும் இருக்கும். எ - ம். 45

46 - வது குன்மவலிக்கு.

சீராய் வெண்சாரணைவேர் தின்காயம் வெந்நீரிற்
பூராயுண் குன்மவலி போம்.

சீரகந் தின்னச் சீரணமியாவும்.

இ - து. வெள்ளைச் சாரணைவேர் பெருங்காயம் இரண்டையும் வெந்நீரிற்கலக்கி நாலைந்து நாள் காலைமாலை யுண்டுவரவும். குன்மவலியானது உடனே அடங்கிவிடும். (ப - மி.) சாதம் சீரணிக்காமல் அசீரணப்பட்டவர்கட்கு கொஞ்சஞ் சீரகத்தைத் தின்னக் கொடுக்கவும், சீரணசக்தியைத்தரும், எ - ம். 46

47 - வது வாளச்சுத்தி.

சுத்தியாம் வாளந்கொட் டெருமைச் சாணியினிற்
பத்தியாய் வேவிக்கப் பண்.

சுன்னத்தில் மஞ்சள் சூட்சமறியும்.

இ - து. நேர்வாளமானதை மூட்டைகட்டி எருமைச்சாணியினிற் போட்டு தண்ணீர்விட்டுக் குழம்பாக்கி வேவித்த பிறகு அதை உடைத்து ஓடு மூளை போக்கி உலர்த்தியபின் பசுநெய்யில் அல்லது விளக்கெண்ணையில் வறுத்து பலவித மருந்துகட்கும் சேர்க்க நன்மையாம். (ப - மி.) எவ்விதச் சரக்குகளையுஞ் சுன்னஞ் செய்யுங்கால், அதிற்கொஞ்ச மஞ்சளுரைத்துத் தடவிப் பார்க்கவும். சிவப்பு நிறமேறிடில் அது சரியானதெனக் கொள்க, எ - ம். 47

48 - வது கற்பூரச்சுன்னம்

சூடனைக் கற்பூரத்துள் வல்லிச்சாற் றரைத்
தோடதில் வைகுக் கிடம்.

சூதத்திற் கெந்தி தொக்க மரணம்.

இ-து. ஆலாதகி கற்பூரத்தை கற்பூரவல்லிச் சாற்றிலரைத்து ஒட்டில்வைத்து உலர்த்தி மேலோடு மூடி சீலைமண் ஐந்து செய்து குக்கிடப்புடத்தில் வைக்கவும் பஸ்மமாகும், இதைச் சுன்னத்திற்கலந்து தாம்பூலத்துடன் தரித்துக்கொள்ளவும், சீதளம், சன்னி, சுரமுதலியவை தீரும். (ப-ழி.) சூதமானதில் கெந்தியைச் சேர்த்தரைக்கவுஞ் சூதக மாண்டுவிடும், எ-ம்.

49 - வது இலிங்கக்கட்டு.

செயமா மிலிங்கத்திட்ட லரிப்பூச் சாரை
நயமாய்ச் சாமஞ்சுருக்கிட் டெடு.

செம்முள்ளி தன்னில் நம்வெள்ளி நீற்றும்.

இ-து. இலிங்கமானதை அடுப்புமூட்டி ஒட்டில் வைத்து அலரிப்பூச்சாற்றை இரண்டு சாமஞ்சுருக்கிட்டு எடுக்கவும், கட்டாகும். அக்கட்டை மெழுகாவது, செந்தூரமாவது, சுன்னமாவதுசெய்து வெள்ளி செம்பின்மீது கொடுக்கவும் வர்ணிக்கும் முன்கட்டை அனுபான விசேஷத்தி லிடவும் பல் நோய்கள் விலகும். (ப-ழி.) செம்முள்ளி.யானதையரைத்து அதில் வெள்ளியைத் தகடடித்து கவசஞ்செய்து எட்டுகை விரட்டியிற் புட மிடவும் நீற்கும், எ-ம். 49

50 - வது சேங்கொட்டை முறிவு.

சேங்கொட்டை யுண்முறிவு செல்புரசம்பூ பட்டை
யாங் கருந்துங் காடியில்.

சேங்கொட்டை யண்ணன் சேதிதெரியாதா.

இ - து. சேராங்கொட்டையைத் தின்றபேர்க்கு புரசம்பூ பட்டையை காடியிலரைத்து காடியிற் கலக்கி உள்ளுக்கெற்றவும், அது உடனே வாந்தியாகி மருந்து வெளிப்பட்டு சுகுணமாய் விடுவர். (ப-ழி.) சேங்கொட்டையின் பாலானது தேகத்திற் பட்டவுடனே சிலருக்கு உடம் பூதி தொந்தரவு செய்யும், அதற்கு கட்

நீச்சோறு கட்டிக்கொண்டுபோய் புளியமரத்தை தழுவிக் கட்டியழுகையில் அவ்வீறு நிவர்த்தியாகும். எ-ம்.

51-வது சன்னிக்கு.

சைத்திய மறத்துழாய்தன்னிற் பூரந் திரிநாள்
வைத்தரைத் துண்டை மாட்டு.

சைத்தியந்தீர வைத்தியம்வேண்டும்.

இ - து. துளசிச் சாற்றில் ரசகற்பூரம் மூன்றுநாளரைத்து பயர்வீதங் குளிகைசெய்து சிறுவர்கட்கு-1, பெரியவர்க்கு-2, ஆக தேனிலிழைத்து காலை மாலை-1, 2,-3. நாள் இழைத்துக் கொடுக்கவும், சைத்தியம், சீதளம், சன்னி, சுரமுதலியவை தீரும், வறுத்தவுப்புசுட்ட புளி சேர்க்கவும். (ப-மி.) யாதா மொருவர்க்கும் சைத்தியந் தீர்வதற்கு வைத்தியஞ் செய்யத்தான் தீரும். எ-ம்

52-வது கருஞ் சொரிக்கு.

சொத்தைக்கிளாயிலையி னுட்பொடியைப் பனைவெல்
தொத்தியுண் கருஞ் சொரிக்கு. [லந்

சொத்தைப்பல்லுக்குத் துவரைவேர்பிடுங்கும்.

இ - து. சொத்தைக் கிளாயிலை-அதாவது-பாம்பு கிளாயிலையைச் சூரணஞ்செய்து அதைப்பனைவெல்லத்திற் பிசைந்து 40-நாள் ஒரு மண்டலம் காலை மாலை வெறுகடிப் பிரமாண முண்டுவரவும் கருஞ்சொரியானது தீரும். பத்திய மொன்றுமில்லை (ப-மி.) துவரைச் செடிக்கு ஆதிவாரநாள் மஞ்சள்நூலிற் காப்புகட்டி சாப நிவர்த்திசெய்து திரியாட்சரத்தை ஆயிரத்தெட்டு உரு-செபித்து அவாள்பேர் சீட்டெழுதி அதன்கிளையிற் கட்டி வேரறுமற் பிடுங்கவும், சொத்தைப்பல்லானது மாறிவிடும். எ-ம். 51

53-வது சோகைக்கு.

சோகைக்குக் கீழாயிநெல்லிச்சார் காலை யினிற்
சேகரித் துட்கொண் டிடு.

சோராநெஞ்சுவேர் தூள்தேன்சேய்க்கிடு.

இ - து. கீழாய்நெல்லிச் சாரை மூன்று நாள் காலை யினில் மாறுது உட்கொண்டுவரவும் சோகையானது தீரும். கடும்பத்தியம் வைக்கவும். துவரை, பசுமோர் பசும்பாலாகும், மற்றதொன்றுமாகாது. (ப - மி.) நெருஞ்சியான் வேர்சூரணஞ்செய்து தேனில் வெறுகடிவீதம் குழப்பித் தின்னவும் குழந்தைகள் சில்லரை நோய்களெல்லாந் தீரும். எ - ம். 53

54-வது பாலுண்டாக.

தரைக்குட் பூநாகந் தன்னைப் பசும்பாலி
லரைத்துட்கொள் பால் சுரக்கும்.

தண்ணீர்முட்டானைத் தழுவப்பால்சுரக்கும்.

இ-து. பூமியிற் சஞ்சரிக்குந் நாக்குப்பூச்சியைத் தோண்டி யெடுத்து மோரிற் போட்டு மண்ணகற்றி அதைப் பசும்பாலி லரைத்து உட்கொடுத்துத் தின்றவர்க்கு மார்பில் பாலானது சுரக்கும், இவ்வாறு மூன்று வேளைத் தின்னவும். (ப - மி.) தண்ணீர் முட்டான் கிழங்கை மார்போ டணைத்துத் தழுவவும், பாலானது சுரக்கும். எ - ம். 54

55-வது காசத்திற்கு

தாய்க்கண்டங் காரித்தன் வேரைத் துண்ண
நோய்க்குளே காச மேகும.

தாமரைமோட்டுப் பூச்சிக்குச் சத்துரு.

இ-து. கண்டங்கத்திரி வேரைச் சும்மாயரைத்தாகிலும் அல்லது கியாழங் காச்சியாகிலும், உண்டுவரவும்,

காசமான தகலும் காலைமாலை இருபது நாள் கொள்ளும்போது அரைப் பத்தியமாய் வைக்கவும். (ப-ழி.) தாமரையிலையில் மூட்டுப் பூச்சிகளை நோகாது அதில் விடவும் அப்படி யிப்படி யசையாது மாண்டுவிடும், எ - ம். 55

56-வது இரசப்பிடிப்பிற்கு.

தினம்விடத் தேர்மூலத்திற் கியாழமாய்க் காச்சி
கனமுடனுண் பிடிப்பற் றிடும்.

திப்பிலித்தின் றுதிடமாளு ளப்பாத்தை.

இ – து. விடத்தேருச மூலமானதைக் கியாழமிட்டுக் காசி காலை மாலையில் குடித்துவரவும் இரசவேக் காட்டாலுண்டாகிய கைகால்பிடிப்பனைத்தும் நிவர்த்தியாய் விடும். (ப - ழி.) அப்பாத்தையானவள் பிரசவித்தவுடனே திப்பிலியைத் தின்றல்லவா திடமானுள்.

57-வது தேள்விஷத்திற்கு

தீரமாய்ச் சாரத்திற்சுன்னந் தொக்கிடவே
நீரதாங் கடிவாயில் வை.

தீராதநோய்க்குச் சிவனார்வேம்பிடு.

இ-து. நவ்வாச்சாரத்திற் கொஞ்சம் சுண்ணம்பை வைக்கவும் அதுதண்ணீராய்க் கரைந்துவிடும், அதை தேள்கொட்டி விஷமேறியவர் கடிவாயில் வைக்கவும் விஷமற்று குளிர்ந்துவிடும் (ப-ழி.) சிவனார்வேம்பானதைச் சூரணித்தாகிலும், தைலமிறக்கியாகிலும் உட்பிரையோகிக்கவும்: எக்காலுந் தீராதநோய்கள் தீர்ந்துவிடும் எ-ம். 57

58-வது பவித்திரப்பூச்சிற்கு.

துட்டளவெட்டியிலைத் தொட்டரைத்துப்பவுத்திரக்
கட்டப் பூச்சற்று விழும்.

துடிவாதந்தீரப் பொடிநொச்சில்வேறிடு.

இ-து. எட்டியிலையானதை மைபோலரைத்து ஒரு துட்டளவே யெடுத்து பில்லைதட்டி அதை பவுத்ர முள்ளவிடத்திற் கட்டிவரவும், அதிலுள்ள பூச்சிகள் வெளிப்பட்டு மடிந்துவிடும். அப்பொழுது பவுத்திர மானது உலர்ந்துவிடும. (ப-ழி.) நொச்சிலிவேர் சூர ணஞ்செய்து அதிற்சர்க்கரை கலந்து ஒருபட்ச முண்டு வரவும் துடிவாதமானது தீரும். எ-ம். 58

59-வது ஈளையிருமலிற்கு.

தாதுளைக்கர்ப்பந் தொடு மேகமிரும லிற்குப்
போதுமே மண்டலங் கொள்.

தாதுவேளையிற் சொன்னதெல்லா மறும்.

இ - து. தாதுவேளையானதில்' இலையை யுபயோகிக்க உண்டியைத் துலைக்கும், பூவை யுபயோகிக்க தாது விர்த்தியை யளிக்கும். காயை யுபயோகிக்க வாதபித்த சயத்தைமாற்றும்' வேரை யுபயோகிக்க அனந்தநோய்களை யகற்றிவைக்கும். இது காயகர்ப்பத் தொன்றுகையால் இதை தினகாரி உபயோகிக்க ஈளை இருமல் தீரும. (ப-ழி.) தாதுவேளையில் சொல்லபட்ட வியாதிகள் அனைத்துந் தீரும். எ - ம். 59

60-வது கர்ப்பமுண்டாக.

தெளிவுடன்கர்ப்பமாஞ்சேரெண்ணைக்கெச்சையிலை
மிளகு வெள்ளுள்ளியுட னுண்.

தெளியவேசெப்பு நெருஞ்சிக்கொப்பில்லை.

இ - து. கெச்சைக்காயிலையுடன் கொஞ்சம் மிளகு பூண்டுஞ் சேர்த்தரைத்துத் தினறுலுந் தின்னலாம், அல்லது முன்விழுதில் ஆமணக்கெண்ணை விட்டு குழப்பிக் குடித்துவந்தாலும் வரலாம், இதில் கர்ப்பமுண்டாகும், பத்தியமாயிருக்கவும், (ப-ழி) செப்பு நெருஞ்சி

யானது எல்லா வியாதிகளையும் நீக்குவதால் அதற்கு வேறொன் றொப்பில்லை யென்பதாம். எ-ம். 60

61-வது மார்புச்சளிக்கு.

தேற்றான்விதையைத் தெண்ணீரிற்றா னுரைத்துண்
மாற்றுன் மார்சளியு மறும்.

தேற்றாங்கொட்டையிட்டுத்தேற்று மைந்தரை.

இ - து. தேற்றான் விதையை தண்ணீர்விட் டுரைத்திட சந்தனம்போலிருக்கும் அதையப்படியே 2 - 3 விசை உட்கொள்ள மார்புச்சளி கோழைக்கட்டுகள் இளகி வெளிப்பட்டு நின்றுவிடும். (ப - மி.) தேற்றான் கொட்டையை குழந்தைகட் குபயோகிப்பதில் அச்சிசுக்களை அதுதேற்றுவிக்கும். எ - ம். 61

62-வது மூர்ச்சைவாய்வுக்கு.

தைவேளைச் சாற்றிற் சந்திக்கத் தேனைவிட்
டைவேளை யுண்ண வறும்.

தைபிரைக்காணத் தழைத்திடும்பூநீர்.

இ - து. தைவேளையானதைச் சார்பிழிந்து அதில் கொஞ்சம் தேனைவிட்டுச்சாரித்து ஐந்துவேளை உட்கொண்டுவரவும். மூர்ச்சைவாய்வானது நின்றுவிடும். வறுத்தவுப்பு சுட்டபுளிகூட்டவும். (ப - மி.) பூநீரானது தைமாதம் மூன்றாம்பிரைநாள் முதற்கொண்டு எங்கும் ஜனித்துத் தழைக்கும். எ-ம். 62

63-வது பலநோவிற்கு.

தொல்கடுக்காய் மாதளம்பூ தொட்டரசிலைச் சார்மு
தலநசியம் பண்ண மூட்டு.

தொண்டிப்பூண்டிற் றொண்ணூற்றாறும்போம். நச்சுக்கு

இ - து. கடுக்காயும், மாதம்பூவும் அரசிலைச்சார் விட்டரைத்து அச்சாற்றிற்கலக்கி நசியம்பண்ணி வா

வும் பலநோய்களுந்தீரும், பத்தியப் பரிகாரமாயிருக்க வும். (ப-ழி.) தொண்டிப்பூண்டானதில் தொண்ணூற் ருறு வியாதிகள் நீங்கிவிடும். எ-ம். 63

64-வது சோணிதவாதத்திற்கு.

தோணுந்தசமூலந்தொடுத்தாப்பாலெட்டொன்ருய்க்
காணவுங் காசிவடித் துண்.

தோகைமோகமுறத் தொடுமயில்மாணிக்கம்.

இ-து. சத்தகராதியிற் சொல்லியபடி தசமூலமாகிய பத்துதினுசையும் பசும்பாலிற்போட்டு எட்டிலொன்று யிருகக்காச்சி வடிகட்டிக்குடித்து வறவும், சோணித வாதமானது தீரும். (ப-ழி.) மாதர்கள் மோகமில்லாத வர்களுக்கு மோகமுண்டாக மயில்மாணிக்கத்தை உப யோகித்துவரவும் ஆண்மையுண்டாகும். எ-ம். 64

65-வது இரத்தசீதபேதிக்கு.

நன்னரிவேர் பேதானம் வேப்பீர்க்குக் குமிளும்
பொன்னுயுண் கற்கண் டுடன்.

நல்லெண்ணேப்போதைக்கு மெல்லக்காதேற்றும்.

இ - து. நன்னரிவேறு, பேதானம், வேப்பிலை யீர்க்கு குமிளம், இந்நான்கில் கற்கண்டுஞ் சேர்த்து, மூன்றுநாள் ஆறுவேளை உட்கொள்ளவும் இரத்த பேதி, சீதபேதி, முதலியவைதீரும். (ப-ழி.) கள்ளுசா ராயக் குடித்து போதையதிகரித்தவர்க்கு அவாள்காதில் கொஞ்சம் நல்லெண்ணே விட்டுதுணியால் மூடிவைக்க வும் அப்போதை யகலும். 65

66-வது. இரத்தமூலத்திற்கு.

நாட்டுமரவட்டை நற்றாள் புகை தீயிற்
காட்டப்போ மிரத்த மூலம்.

நானிட்டமருந்து போகட்டாது
நன்னாரிவேறு சாகட்டாது.

இ-து. மாவட்டையை உலர்த்தி பொடிசெய்து படைநெருப்பிற்போட்டு அபானத்திற் புகைபிடிக்கவும் இப்படி இரண்டுமூன்று வேளையில் இரத்தமூலமானது நின்றுவிடும் (ப-ழி.) நன்னாரிவேரில் இட்டமருந்து தலைமண்டைக்கேறி அவாளை விட்டுப் பிரிந்துபோகவு மொட்டாது, மீண்டுஞ் சாகவு மொட்டாது இந்த நன்னாரி வேரினாலேயே முறிப்பதுவு முண்டு. எ-ம். 66

67-வது மேல்சுவாசத்திற்கு.

நிலையாய்க் கருங்கோழி நீறுகாச்சீந் திடவே
தொலையு மேற்சுவாச மது.

நிலைப்பனைநெய்யிலிழைத்துண்ணக்கர்ப்பம்.

இ-து. கருங்கோழியைக் காச்சிச் சார மிறக்கி அதை ரசஞ்செய்து குடித்துவரவும், மேல்சுவாசமானது நீங்கிவிடும், கருங்கோழியானது அதினுடம்பில் ஒரு ஊசியைக் குத்தவும் உள்ளிறங்கிய வூசி கரைந்து வெளியிலிருக்கு மூசிதான் கையில்வரும்பரிட்சை (ப-ழி) நிலைப்பனைக் கிழங்கை நெய்யிலிழைத்து உட்கொள்ளவும் கர்ப்பமுண்டாகும். எ-ம். 67

68-வது நீரிழிவிற்கு.

நீரிழிவுக்கல்மதமும் நிகழ்கொன்றைப்பட்டையா
வாரந் தாள்காச்சியே யுண்.

நீலித்துணியில் நீறும்பலகரை.

இ-து. கல்மதம் கொன்றைப்பட்டை ஆவாரந் தாள் மூன்றையுங் காச்சி ஒருவாரம் இருவேளையு முட்கொண்டு வரவும், நீரிழிவு நின்றுவிடும். இச்சாபத்தியமாயிருக்கவும். (ப-ழி) நீலத்துணியில் அல்லது நீலத்

தைத் தண்ணீரி லுரைத்து துணியிற் பூசி அதிற் பலகரைகளை வைத்துச்சுருட்டி குக்கிடபுடமிடவும் நீறும்.

69-வது இரைப்பிருமலிற்கு.

நுவலுஞ்சடாமாஞ்சியோடு பழச்சாற்றரைத்து
சுவையாகத் தேனிலுட்கொள்.

நுணயிலைச்சாற்றிற் கணச்சூடுதணியும்.

இ - து. சடாமாஞ்சி யானதை எலுமிச்சம்பழச் சாற்றி லரைத்து தேனிற்குழப்பி ஐந்துநாள் காலை மாலையில் உட்கொண்டுவரவும், இருமல் இரைப்பு முதலியவை தீரும். (ப-ழி.) கணச்சூடு வுண்டாகிய பிள்ளைகட்கு நுணயிலைச் சாற்றைப் புகட்டவும் நன்மையாம்.

70-வது மேகத்திற்கு.

நாராண்டுவன்னியிலை யெருமைத் தயிரினி லுண்
பாராண்ட மேகம் படும்.

நூலையாராய்ந்து வேலைகளைச்செய்.

இ - து. நாறுவருடஞ்சென்ற வன்னிமரத் திலையை எருமைத்தயிரினி லரைத்து அத்தயிரிற்கலக்கி கால் மண்டலம் காலையி லுட்கொண்டு வரவும் மேகமான தகன்றுவிடும். (ப-ழி.) பல நூல்களையு மாராய்ந்து அந்தந்த முறைப்பாகங்களைச்செய்யவும். எ-ம். 70

71-வது வாந்தியடங்க.

நெல்லித்திப்பிலியும் நெற்பொரியுஞ் சீரகமும்
வல்லியமாய்க் கியாழம்வைத் துண்.

நெல்லியின்பேரை யல்லிற்சொல்லாதே.

இ - து. நெல்லிவத்தலும், திப்பிலியும், நெற்பொரியும், சீரகமும், ஆகிய நான்கையும் கியாழம்வைத்துக் காய்ச்சி வடிகட்டி உட்கொள்ளவும் வாந்தியான தடங்

மடும் மீறிடின், மறுபடியுங் குடிக்கவும். (ப-ழி) நெல்லிக்காயின்பேரை இரவினிற் சொல்லாதே, எ-ம். 71

72-வது சேத்துமபாண்டிற்கு.

நேரான கையானிலை மிளகு புன்னையளை
வாராகவுட் கொண் டிடு.

நேற்றுப்பழங்கரி யேற்றுக்கொள்ளாதே.

இ-து. கரிசலாங் கண்ணியிலையும் மிளகும் அரைத்து புன்னக்கா யளவு ஐந்துநாள் அந்திசந்தி யுட்கொண்டுவரவும் சேத்துமபாண்டு தீரும், கடும்பத்தியம் வைக்கவும். (ப-ழி.) நேற்றையதினம் சமைத்த பதார்த்தங்களை மறுநாளில் ஏற்றுக்கொண்டுண்ண லாகாது. எ-ம். 72

73-வது தாதுபுஷ்டிக்கு.

நையக் கற்கண்டும் நற்பேரீந்துந் தேனிற்
பைய வரைத்துண்ணவே பண்.

நைவினையோர்க்கு நாளென்பதில்லை.

இ-து. பேரீச்சம்பழமும், வெள்ளைக்கற்கண்டும், தேனிலரைத்து உண்டுவரவும், தாதுபுஷ்டியாம் அப்படி உண்ணுகையில் ஓர்பட்சம்வரையுண்டு புளியை மட்டுப்படுத்தவும்வேண்டியது. (ப-ழி.) தீராதநோயாளிகட்கு மருந்தளிக்கவும் மற்றதைச் செய்யவும்நாள் கிழமை நட்சத்திரம் பார்ப்பது ஆவசியமில்லை; எ-ம்.

74-வது சன்னிக்கு.

நொச்சிப் பசுபத்திரி நுண்முருங்கை மாவிலிங்கை
உச்சித வீசுரவேறு மூண்.

நொந்தவுடம்பிற்கு வெந்தவமுதிடு.

இ - து. நொச்சி, பசுபத்திரி, முருங்கை, மாவில ங்கை, ஈசுரவேறு இவ்வைந்தும் பசும்பாலி லரைத்து அப்பாலினிற் கலக்கி இரண்டொரு பொழுது உண்(வரவும், சன்னியானது தீரும், பத்தியமா யிருக்கவும். (ப-ழி.) நொந்தவுடம்பாகிய நோயாளிகட்கு வெந்த அமுதையே உபயோகிக்கவும், எ-ம். 74

75-வது மருந்துண்ணும்நாள்.

நோய்க்கு ளவிழ்தமுண் ணிரவிகுரு குசனும்
வாய்க்கும்படி யேற்று நாள்.

நோயொன்றிருக்க மருந்தொன்றேறு.

இ - து. நோய்கட்கு அவிழ்தப் பிரயோகஞ் செய் யில் ஞாயர், செவ்வாய், வியாழமாகிய இவ்வாரங்களில் எவர்கட்குமருந்தேற்றவும் அந்நோய் விரைவிற்றீர்ந்து விடும், மற்றவாரங்கள் கூடாவாம. (ப - ழி.) ஒருநோ யிருக்க மற்றொரு நோய்க்கு மருந்தேற்றிற் பலனெ ன்ன, எ-ம். 75

76-வது வாயிலிரத்தம்வருதற்கு.

பருத்தி யிலையும் பாரினிற் சீரகமும்
வறுத்துக் கியாழம்வைத் துண்.

பல்லரணைக்குப் பற்பாடகவேர்பிடுங்கு.

இ-து. பருத்தி யிலையோடு சீரகமுஞ்சேர்த்து இர ண்டும் வெவ்வேறுவறுத்து கியாழம்வைத்து இரண்டு மூன்றுவிசை யுட்கொள்ளவும் வாயிலிரத்தமானது வரு வது அடங்கிவிடும் (ப-ழி) பல்லரணைக்கு பற்பாடக மானதைக் காப்புகட்டி அவாள் பேர் சீட்டெழுதி அதின் கிளையில் முடிந்து சாபநிவர்த்தி செய்து திரி யட்சரம், ஆயிரத்தெட்டு, உருசெபித்து உச்சிவேறறு

மற் பிடுங்கிடவும் அந்நோயானது அவாளை விட்டுப் பிரியும், எ-ம். 76

77-வது மலட்டுவயர்வலிக்கு.

பாவைச்சார் மாறளவு படுநீரிற் றுனருந்த
கோதையுங் கர்ப்ப மாவள்.

பாவைச்சார்கைவிடப் பட்டதுமருந்திடு.

இ-து. பாவையிலைச் சாரைப் பிழிந்து காலையில் மாரளவு தண்ணீரிலிருந்துகுடிக்கவும், இப்படி மூன்று நாட் குடிக்க அவள்மலட்டு வயர்வலி நீங்கி கர்ப்பமுண்டாவள். (ப - ழி) அப்பாவைச் சாரை உள்ளங்கையில் விடவும் அவாள் வயற்றில் மருந்திருக்கில் அதுதோய்ந்துவிடும், இல்லாவிடின்தோயா திருக்கும், எ-ம். 77

78-வது கண்ரோகத்திற்கு.

பிசகா முலைபாலிற் பீதரோகணி யரைத்து
வசமாகக் கண்ணிற் பிழி.

பிஞ்சுமுருங்கைப் பிந்திருக்கச்செய்யும்.

இ - து. பீதரோகணியை முலைப்பாலி லறைத்து அதைக் கண்களிற் பிழிந்துவரவும். கண்களிலுள்ள ரோகங்களானவை தீரும். கவிச்சுசிலந்திபதார்த்தங் களை நீக்கவும் (ப - ழி) முருங்கைப் பிஞ்சை கரணை கரணையாய்த் தரித்து அடுப்பின்கும்பியிற்போட்டு வெதுப்பி போகிக்கும்போது ஒவ்வொரு கரணையை வாயிலடக்கி சாரத்தை விழுங்கி வரவும் நெடுநேரம் இந்திரியங் கலிதமாகாது, எ-ம். 78

79-வது பீநசத்துக்கு.

பீநச மெட்டிற்கும் பெருமுயலதின் கட்ட
மானது பொடிநசிய மாட்டு.

பீலிசுரத்திற்குப்பெரும் கஞ்சாங்கோரையிடு.

இ - து. முயலானதின் கட்டம் அதாவது அதன் புக்கையை ஆர்க்கப் பொடிசெய்து இருநாசிகளிலும் நசியமேற்றவும் இவ்வாறு இரண்டு மூன்றுநாள் செய்யவும் பீநசங்கள் எட்டுவிதமும் அகன்றுவிடும். (ப-ழி) கஞ்சாங் கோரையைச் சார்பிழிந்து உள்ளுக்கேற்றினு லுஞ்சரி அல்லது அவ்விலையோடு மிளகு பூண்டுசேர்த்தரைத்தாகிலும் இரண்டு மூன்றுநாள் உண்டுவரவும் பீலிசுரமானது நீங்கிவிடும், எ-ம். 79

80-வது புழுவெட்டிற்கு.

புழுவெட்டிவாளம் பூசவும் வெண்ணெ யினில்
வழுவவு முரைத்திடப் போம்.

புண்ணுக்கிற்றேங்கா யெண்ணெயிட்டாற்றும்.

இ - து. நேர்வாளத்தை வெண்ணெயினில் உரைத்து புழுவெட்டாகிய .ரோமங்க ளுதிர்ந்தவிடங்களிற் றடவிவரவும், அப்புழுக்களானவை வெளிப்பட்டு வருவதில் அவைகள் புண்ணாகிவிடும். (ப-ழி) புழுவெட்டிய விடங்கள் புண்ணாகிடில் அதற்குத் தேங்காயெண்ணெயைத் தடவிவரவும், அப்புண்களானவை ஆறிவிடும், எ-ம். 80

81-வது பூரபஸ்மம்.

பூரமேற்சீனம் பொடிசமனு யெரித் தெடுத்
தீரைந்துண் டெங்கு நீரில்.

பூரத்தைக் காட்டப் பூவுமெலிந்துபோம்.

இ-து. அடுப்பின்மீது ஓரோட்டில் ரசக்கற் பூரத்தைவைத்து அதின்மேல் படிகாரத்தூளைப் போட்டு எரிக்க இப்படிகார முருகி ரசகற்பூரத்தை வெளியிலோடவொட்டாது அழுத்திவிடுவதில் அவ்விரண்ட

யும் கிளரி இரக்கிடவும் பஸ்மமாம், இப்பஸ்மத்தில் குன்றியளவு தேங்காய் நீரில் போட்டு 10 நாள் உட்கொள்ளவும் அழல் சூடு, இருமல் முதலியதை நிவர்த்திசெய்யும். (ப-ழி) அந்தரசகற்பூரத்தைக்காட்ட புஷ்பங்களும் வாடிவதங்கி மெலிந்துவிடும், எ-ம். 81

82-வது பெருப்பாட்டிற்கு.

பெருமபாட்டிற் குருவரிசி பேசுமா கவுதும்பை
அறுநாளுண் கருப்புட்டி யால்.

பெருங்காயந்தின்று பிலமானுளப்பாத்தை.

இ - து. குருவரிசியானதை மாவிடித்து கவுதும்பைத்தூளையும் சேர்த்துப் பனைவெல்லத்திற் பிசைந்து ஆறுநாள் இருவேளை உண்டுவரவும் பெரும்பாடானது தீரும். இச்சாபத்தியம் வைக்கவும், (ப-ழி) பிரசவித்த பெண்பிள்ளையானவள் பெருங்காயந் தின்றதாலல்லவா பிலிமானது, எ-ம். 82

83-வது குளிர்ச்சிக்கு.

பேதனுநீரிற் பிலக்கச் சிலப்பியே
நீதமாய்ச் சர்க்கரையி லுண்.

பேச்சுரைதின்னப் பெருமுத்தக்காசிடு

இ - து. பேதனு வென்பதை ஓர் படிகப்பாத்திரத்தில் தண்ணீர் விட்டு அதிற்போட்டு விரலாற் சிலுப்பநுங்குபோல்வரும், அதிற்சர்க்கரை சேர்த்து உண்ணுகையில் கண்கள் சிலிர்க்கும் தேகமுங் குளிர்ச்சியாகும். (ப - ழி) பேய்ச்சுரை தின்றவர்க்கு கோரைக்கிழங்கை காடியிலரைத்துக் காடியிற்கலக்கி உள்ளுக் கேற்றவும், இலகுவாகும், எ-ம்.

84-வது பாம்புகடிக்கு.

பையவே தும்பைச்சார் பற்றியநவ்வச் சாரும்
உய்யவே யுள்ளேற் றிடு.

பைத்தியந்தீர்க்கும் பாதரட்சைத்தோல்.

இ - து. தும்பையிலைச் சாறும் பூனைக்காஞ்சேரி யிலைச்சாறும் இரண்டும ஒன்றாய்க் கூட்டி உள்ளுக்கேற் றவும், அப்பாம்பு கடியின்விஷமானது மீண்டும் சுகு ணப்படுவர், அல்லது உச்சியிற கீறி அச்சாற்றைவிட்டு அரக்கி தேய்த்திடினும் அவ்விஷமிறங்கும். (ப - ழி.) பைத்தியமானதைத் தீர்க்குமபடியானது பாதரட்சைத் தோலொன்றே, எ - ம். 84

85-வது புரைக்குழிக்கு.

பொரைக் குழிக்காழியைப் போதவே நீரி
லரைத்துக் கரைத்துமேல் வை.
பொன்னதுவேண்டிற் பூவரசைப்பார்.

இ - து. பூமிக்குள்ளிருக்கும் ஆழிக் கிளிஞ்சலைத் தண்ணீரிலரைத்துக் கரைத்து அப்பொரைக் குழியின் மேல் வைக்கவும அதுகொஞ்ச நேரத்திற்கெல்லாம் கரைந்துவிடும், அதற்குத்தேங்கா யெண்ணை அதன் மேற் றடவி அப்புண்ணை யாற்றிவிடவும் (ப - ழி. பொன்னானது வேண்டுமாகில் பூவரசனிற் பார்க்கவும்.

86-வது நீர்க்கோவைக்கு.

போதவே சர்க்கரையும் புகழ்கருவேப்பிலை தாளும்
வாதநீர்க் கோவையிற் றுண்.

போத்துண்ணுப்பாளை மாற்றும்விஷங்களை

இ-து. கருவேப்பிலையை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து சர்க்கரை கலந்து தினசாரி வெறுகடித் தளா [illegible]க அந்தி சந்தியுட்கொண்டுவரவும், நீர்க்கோவை, சூதக்வாய்வு முதலியவை தீரும், பத்தியமில்லை (ப-ழி.) [illegible]விஷக்கடிகளையும் ஆடுதின்னுப்பாளையானது அக ற்[illegible]வைக்கும், எ-ம். 86

87-வது மண்டூரச்செந்தூரம்.

மண்டூரச் சிட்டமயப் பொடியும் பழச்சாற்றில்
கொண் டரைத்தும் புடமிடு.

மண்டூரந்தின்னக் கெண்டகுனவன்.

இ-து. நூறுவருடஞ் சென்ற சிட்டமானதையும் அயப்பொடியையும் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து 10-கை விரட்டியிற் புடமிடவும், இப்படி-21-தரம் புடமிடவும் செந்தூரமாம், இதில் குன்றியிடை தேனிலிடவும், சோகை, காமாலை, பாண்டு, விஷபாண்டு, நீர்ப்பாண்டு முதலியவை தீரும். (ப - ழி.) மண்டூரமாகிய செந்தூரத்தைத் தின்னப்பட்டவன் மகா கொண்டகுவன்.

88-வது வசியமூலிகை.

மாலிங்கப் பாவைச்சார் மகள்சிறு நீறுந் தலைதேய்
நீலி வசப்படுவாள் நேர்.

மாயமருந்தால் தாயைமறந்திடுவன்.

இ - து. மாலிங்கப் பாவை யென்பது காட்டுப் பாவை அதில் லிங்கமானவைகள் அடுக்கடுக்காயிருக்கும், அவ்விலையின் சாரோடு தன்சிறுநீறுங் கலந்து எதிரி தலையிற்றேய்த்துத் தலைக்கு வார்க்கவும், வசியமாவர். (ப - ழி.) இவ்வித மாயமருந்தினுல் தனது தாயையும் மற்றதையு மறந்துவிடுவர், எ-ம். 88

89-வது அழல்கொண்டசூட்டிற்கு.

மிளகைச் சிறுநீரின் மேலிட்டு மண்டலங்கொள்-
ளளவிலாச் சூடு மறும்.

மிளகு கர்ப்பத்தினுள வறிவன்சித்தன்.

இ - து. நல்ல கெட்டிமிளகானதைச் சிறு[...]
ரப்போட்டுலர்த்திமறுபடியும் அவ்வாறே 4-5-[...]

செய்து உலர்த்தி தினம் ஒன்றுக்கு ஒவ்வொன்றுயர்த்தி 108 - நாளைக்கு 108 - ஆகிடின் மறுபடியும் ஒவ்வொன்ருய்க் குறைத்துத் தின்னவும் தேகத்திலுள்ள அழல் வெப்பம் சூடு முதலிய பல வினைகளுமாறும் இது காய கர்ப்பத் தொன்று. (ப - ழி.) இம்மிளகு கர்ப்பத்தை வேண்டியுண்பவன் சித்தனைவன், எ-ம். 89

90-வது தீராப்பேதிக்கு.

மீறியப்பதிக்குண் மிகவாழைப் பூவு புளி
யாரை புட்டாக்கி மதுவில்.

மீனிற்சுருவும் வெகு மூலைப்பால்தரும்.

இ - து. வாழைப்பூவும் புளியாரையும புட்டாகச் செய்து தேனில் மத்தித்து உட்கொள்ளவும் இரண்டொருவேளையில் நிற்காதபேதியானது நின்றுவிடும். (ப - ழி.) சுராமீனைதைப் பாலில்லா மாதர்களுக்குச் சமைத்துப்போடவும். அதை அவாள் தின்னுகையில் அதிகப்பால்சுரக்கும், எ-ம். 90

91-வது மஞ்சாவெள்ளைக்கு.

முத்தற்பிறண்டைச்சார் முத்தெண்ணை நாள்மூன்று
பத்திய மஞ்சாவெள்ளைப் படும். [ண்

முருங்கைப்பூவுண்ண நுறுங்குமாமேகம்.

இ - து. முத்தலாயிருக்கப்பட்ட பிரண்டையைச் சார்பிழிந்து ஆமணக்கெண்ணையுஞ்சேர்த்து மூன்று நாள் குடிக்கவும். மஞ்சாவெள்ளையானது நிவர்த்தியாகும கடும்பத்தியமா யிருக்கவும். (ப - ழி.) முருங்கைப் பூவைதை சமைத்தாகிலும் அல்லது வேறெவ்வித மும் உட்கொள்ளவும் மேகமானது தீரும், எ - ம்.

92-வது மூலப்பிரமியத்திற்கு.

மலமுருங்கைப்பூ முதிர்க்குமரிச் சோரதுவும்
ஏலவெண்ணெயி லரைத்துண்.

மூலத்திற்காதி முன்சிசுவத்தி.

இ - து. முருங்கைப்பூவும் குமரிச்சோறும் இவ்வி ரண்டும் வெண்ணெயி லரைத்து எலுமிச்சம்பழவீதம் 3-நாள் உட்கொள்ளவும், மூலப்பிரமியமானது நிவர்த் தியாகும். சடும்பத்தியம் வைக்கவும். (ப - ழி.) மூல நோய்க்குமுன்னுதாய் சிசுவாத்திதோஷஞ் செய்திடின் அந்நோயான துதிக்கும், எ - ம். 92

93-வது நீர்க்கட்டிற்கு.

மெல்லிய தக்காளிச்சார்விட்டு நல்லெண்ணெயினிற்
சொல்லியப்படி யுண்டிடு.
மெய்யாய்ச் சேங்கொட்டை மரமவிஷ மீட்கும்.

இ - து. தக்காளிச்சாறும் நல்லெண்ணெயுங் கல ந்து ஏழுநாட்காலையில் உட்கொண்டுவரவும், நீர்க்கட்டு நின்றுவிடும். கடும்பத்தியமாய் வைக்கவும். (ப - ழி.) சேராங்கொட்டை மரமானதை சிறியகிளைகளைத்துண்டு துண்டாய்த்தரித்து அவைகளை நல்லெண்ணெயிலூரப் போட்டு சகலவிஷக்கடிகட்கும் தண்ணீர் அல்லது முலைப்பாலிலுரைத்து கடிவாயிற்றடவியும் உள்ளுக்குங் கொடுக்கவும் தீரும், எ - ம். 93

94-வது அசீரணத்திற்கு.

மேலு மேகாக்கணம்வேர் மிளகு வெந்நீரினிலே
நாலுவேளையு மருந்து.
மேகத்தை நீக்குமிக பரங்கிச்சக்கை.

இ - து. வெள்ளைக்காக்கணம் வேரும் மிளகும் அரைத்து வெந்நீரினில் இரண்டுநாள் 4-வேளை உட் கொள்ளவும் அசீரணம் செரியா மந்தமுதலியதை கும். இச்சாபத்தியமாய் வைக்கவும். (ப - ழி.) பரங்கி சக்கையானது மேகத்தை யணுகவொட்டாது நிவர்த்தி செய்விக்கும், எ-ம்.

95-வது பித்தசுரத்திற்கு.

மைந்தர்க்குப் பித்தசுரம்வர நெருஞ்சில் வேர்
முந்தப் பொடிதேனில் மூட்டு.

மைந்தரைவளர்க்கு மணித்தக்காளி.

இ - து. நெருஞ்சில் வேரானதை யுலர்த்தி வஸ்திரகாயஞ்செய்து அப்பொடியில் தேன்விட்டுப் பிசிரி புன்னைக்காயளவு மூன்றுநாள் ஆறுபொழுதேற்றவும் பித்தசுரமானது அகலும் வறுத்தவுப்பு சுட்டபுளிகூட்டவும். (ப - ழி.) மணித்தக்காளியானது மைந்தர்களை வளர்க்கும், எ - ம். 95

96-வது எருக்கின்பால்முறிவு.

மொச்சைக்கொட்டையை முன்காடியிலரைத்துண்
நச்செருக்கின்பால் முறிவு.

மொச்சைவிழுதில் முன்கள்ளிப்பால்முறியும்.

இ - து. மொச்சைக்கொட்டையானதை காடியிலரைத்து காடியிற்கலக்கி உப்புகட்டவும் எருக்கின்பால் முறிவுபடும். (ப - ழி.) இந்த மொச்சைக் கொட்டையின் விழுதை உள்ளேற்றவும் கள்ளிப்பாலின் விஷமுங்கக்குவிக்கும் இதற்கு கடுக்காயும் அரைத்துக் காடியிற் புகட்டவு முறியும், எ - ம். 96

97-வது நீர்ச்சுருக்கிற்கு.

மோரிற்கல்நாரை முன்னரைத்துத் தேனிற்கொள்
நீரிற் சுருக்கினமே நிற்கும்?

மோருஞ் சோறுண்ண முறிக்கும் வாளத்தை.

இ - து. மோரானதில் கல்நாரையரைத்து அதை புளிவோட்டில் தெளித்து உலர்ந்தபின் அவைகளைச் சரண்டி அடுப்பிற் சட்டிவைத்து அதிற்போட்டு வறுத்து எடுக்கப் பஸ்மமாம் அதிற்கொஞ்சம் தேனிலிழை

த்து உட்கொள்ளவும். ஏழெட்டுவேளையில் நீர்ச்சுருக் கானது நின்றுவிடும். (ப - ழி.) வானத்தினுலுண்டா கிய கொடுரேத்துக்கு மோருஞ்சோறுண்ணவும் முறிந்து விடும், எ-ம். 97

68-வது கவுரிபாஷாணக்கட்டு.

வளங்கவுரிக் கட்டதுவு மாகப்பேய் பீர்க்கன்சார்
தளஞ் சுருக்கிடு சாமமே.

வன்னியிலை யுண்ணமுது மேகந்தீரும்.

இ – து. கவுரிப்பாஷாணத்தை பேய்பீர்க்கன் சாற்றில் இரண்டொருசாமம் சுருக்கிடவும் அதுகட்டிவிடும் அக்கட்டினை தேனிலுரைத்து உள்ளுக்கேற்ற சுரமுதலியவை தீரும். (ப-ழி.) வன்னியிலையானதையரைத்து உள்ளுக்கேற்றவும் மதுமேகமானவை தீரும், எ-ம். 98

99-வது வாழை ரசக்குணம்.

வாழை ரசத்தில் மடியுமிரும் பனைத்துந்
தாழவே போதை யறும்.

வாழைக்கட்டையால் மதவானையொடுக்கும்.

இ-து. வாழைப்பட்டையின் சாற்றில் இரும்புமுதலியது மடியும் போதையேறியவர்க்கு உள்ளுக்கேற்றவும் அவ்வெறியகலும் அல்லது அம்மரத்தில் அச்சமாகிய கெட்டப்பாரையைச் சொருகிவைத்து 4-நாள் பொறுத்து அதை யொடிக்க 'ஒடிந்துவிடும். (ப – ழி.) அதின்கட்டையில் மதவானையின் பலமுமறும், எ - ம்.

100-வது காமாலைக்கண்ணுக்கு.

வித்தாஞ் சித்தாமணக்கில் மெல்லியர் பாலதைவிட்டு
முத்தா யரைத்துக் கண்மூட்டு.

விஷபத்திச்சீரக விழுதரவக் கடிக்கிடு.

இ - து. சித்தாமணக்குப் பருப்பில் முலைப்பால் விட்டரைத்துக் கண்களிற்றீட்டவும் காமாலைக் கண்

னது மாறிவிடும் கண் துலங்கும் பிரகாசத்தைக் கொடுக்கும். (ப-ழி.) விஷபத்தியும் சீரகமும் அரைத்தவிழுதை உள்ளுக்கேற்றவும் பாம்புகடித்து மண்டைக்கேறிய விஷமானது இறங்கும், எ - ம். 100

101-வது வீரபஸ்மம்.

வீரமாமண்டை வெள்ளோட்டின் றூளினில்வை
நீர தாங்குக் கிடத்தில்.

வீரனைக்காண விலகும் வல்வினை.

இ - து. வீரமானதை தலைமண்டை யோட்டினுடைய தூளை அகலில்பரப்பி நடுவில் வீரத்தைவைத்து மேலும் அத்தூளைப்போட்டு மேலகல்மூடி சீலைமண் 5-செய்து 2-எருவில் புடமிடவும் நீலநிறமாகிய பஸ்மமாம். அதைதேனில் இரண்டொரு அரிசியிடையிழைத்து நாக்கிற்றடவவும் சன்னிமுதலியவைதீரும். (ப-ழி) வீரமானதைக்காண எந்தவினைகளும்விலகிவிடும், எ-ம்.

102-வது இரத்தகாசத்திற்கு.

உண்ணுங் கலியாண முருக்கிலையு மிளகரிசி
வெண்ணெயி லடை சுட்டிடு.

உயர்வாந்திதீர நீருடன் கடுகரைத்திடு.

இ - து. கலியாண முருக்கிலையும, மிளகும், அரிசியுஞ்சேர்த்து அரைத்து அடைசுட்டு அதை சுடசுட நெய்யிற் றுவைத்து உட்கொண்டுவரவும், இருமல், இரைப்பு, இரத்தகாசந் தீரும். கடும்பத்தியமா யிருக்கவும் (ப-ழி.) வாந்தியானதை நிறுத்தவேண்டுமாகில் க[illegible]த் தண்ணீரிலரைத்து கொஞ்சங் குடிக்கக் கொடு வவ்வாந்தியானது நின்றுவிடும், எ-ம். 102

103-வது எரிகுன்மத்திற்கு.

[illegible]ன்றிய கர்ப்பத்துண் திப்பிலி கரந்தை
தோன்றிய சுக்குக் கியாழத்திடு.

ஊதாரிப்பிள்ளைக்கு வோமந்தான் கதி.

இ - து. கரந்தையும் திப்பிலியும் அரைத்து சுக்குக்கியாழத்துட் கொண்டிட எரிகுன்மமானவை தீரும். கர்ப்பஸ்திரீகட்கு முக்கியமானவை வறுத்த வுப்பு சுட்டபுளி கூட்டவும் (ப - ழி.) ஓமமானதை உபயோகப்படுத்திவரவும்ஊதாரிப்பிள்ளையானதும் திடமாய்யாதொரு நோயின்றி எக்காலும் உஜ்ஜீவித்திருக்கும், எ - ம். 103

104-வது வெள்ளைக்கு.

வெள்ளறுகுடன்மிளகு வெள்ளுள்ளிகழற்சியிடைக்
கொள்ளரைத்து வெள்ளையிற் குண்.

வெள்ளிவேண்டிற் கள்ளியைப்பார்.

இ - து. வெள்ளறுகு, மிளகு, வெள்ளைப்பூண்டு மூன்றுஞ் சேர்த்தரைத்து கெச்சைக்காயளவு உட்கொண்டுவரவும் வெள்ளையானது தீரும் மூன்றுநாளுண்டு கடும்பத்தியமா யிருக்கவும். (ப - ழி.) வெள்ளிவேண்டுமாகிற் கள்ளிமரத்திற் பாஷாணத்தைப் பார்க்கவுந்தெரியும். அக்கள்ளியானது திருகுகள்ளியானவை. எ-ம்.

105-வது பவுத்திரத்திற்கு.

வேளையீ றுள்ளி வெண்தும்பை வேரரைத்துக்
காளைப் பவுத்திரத்திற் கட்டு.

வேளையைத்திண்ண வேணபிணிபோம்

இ - து. வேளையிலையும் தும்பைவேறும் [illegible]காயமும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து பவுத்திரமான [illegible] வைத்துக்கட்டிவரவும் அப்பவுத்திரமானவை தீரு[illegible] வறுத்தவுப்பு சுட்டபுளி சேர்த்துண்ணவும் (ப - [illegible]

வெள்ளையானவைத உபயோகித்துவரவும் அனந்தபிணிக ளானவை யகன்றுவிடும். எ - ம். 105

106-வது அந்திரவாயுவிற்கு.

வைப்பாய்ப் புகையிலையு மன்னீரிற் சீரகமுந்
தப்பாதுண் வாத மறும்.

வைத்தியம் பொய்யானால் வானத்தைப்பார்.

இ-அ. பச்சையாகிய புகையிலையும் சீரகமுஞ்சேர்த்து தண்ணீரில் அரைத்து மூன்றுநாள் இருவேளை கடும்பத்தியமாய் உட்கொண்டுவரவும் அந்திரவாய்வு தீரும். (ப-ழி) வைத்தியம் பொய்யாகில் வானமானதிற் பார்க்கவுந் தெரியும், எ-ம். 106

107-வது வீக்கத்திற்கு.

ஒதியப்பட்டையை யிடித்துயர் வீக்கத்திற் கட்டித்
திதி செய்வதாக் காடிவார்.

ஒதிபெருத்தாலுந் தூணாகாது.

இ-அ. ஒதியப்பட்டையை நையநறுக்கி புளிச்சத்தண்ணிவிட்டுப்பிசரி கால்கைகளில் வீக்கமானது கண்டிருந்தாலும் நோக்காடதிகரித்திருந்தாலும்மூட்டி பிசகியிருந்தாலும் இதை அதின்மேல் வைத்துக் கட்டியபின் புளிச்சத்தண்ணீரை அடிக்கடி அக்கட்டின் மேல்விட்டுக்கொண்டுவரவும் வீக்கம் நோக்காடு முதலியவை தீரும். (ப-ழி.) ஒதியமரமானது எவ்வளவுபருத் [illegible]ந்தாலும் தூணிற்கு வுபயோகப் படுத்துவது கடி [illegible] எ - ம். 107

108-வது நாலருமை.

[illegible]ட்டையொன்பது கண்ணுள்ளிற் பிறக்கும் வணகக்
[illegible]ட்டகத் தோட்டமிந் நூல்.

ஓதிய நூலிலுள்ளதைச் செய்யும்.

இ - து. ஒன்பது கண்ணுள்ள ஓட்டைப் பாண்டமாகிய இவ்வுடலி லுண்டாகிய பலவகை நோய்களையும் தங்கவொட்டாது கானகத்தில் துரத்திக்கொண்டு போய் விட்டுவிடுமென இந்நூலருமையைக் கூறியவை (ப - ழி.) இந்நூலிற் கூறியபடி உள்ளதைக் கைபாகச் செய்பாகமாய் நம்பிச்செய்யக் கடவது, எ-ம். 108

நூல்முடிவு.

அவ்வைவிழ்த வர்க்கமதில் வைத்தியக் குறள்
செவ்வைநூற் றெட்டு முற்றே.

அவ்வைப் பழமொழி யீரைம்பானுல் முற்றே.

வாழி.

அறம்வாழி மறைவாழி யாரியர் நூல் வாழி
புறம்வாழிப் பூவோர் வாழி.
வாழியாவரு மகிபால் நீ டூழியே.

வைத்தியக்குறள் - 108.

முற்றிற்று.

சக்கரவர்த்தி
பிரஸ், சென்னை.

புத்தக விளம்பரம்.

	ரூ.	அ.
கம்பராமாயண பாலகாண்ட பாட்டு உரை	3	8
பட்டினத்தார் பாடல் உரை	1	8
தாயுமானசுவாமி பாட்டு உரை	3	4
விநாயகபுராண வசனம் கிளேஸ்காலிகோ பைண்டு	4	0
தனிப்பாடற்றிரட்டு பாட்டு உரை	2	8
வேதாரணிய ஸ்தலப்புராண வசனம்	0	8
அறப்பளீசுரசதகம் உரை	0	12
குமரேச சதகம் உரை	0	12
மானங்காக்கும் ஞானதீபம்	0	4
மகமாயி அம்மன் பூசாறிப் பாடல்	0	4
கந்தனர் டிராமா	0	2
பாண்டியதாஸ் கீர்த்தனை	0	5
மலையாள மாந்திரீக ஹரிச்சுவடி	0	4
கதை புத்தகங்கள்.		
விக்கிரமாதித்தன் கதை	1	0
32—பதுமை கதை	0	8
அகட விகட கோர்ட்டு விசாரணை	0	8
ஸ்திரீ புருஷ ரகசியம்	1	0
ஆயிரத்தொருநாளில் சொல்லிய பாரிசுக்கதைகள்	2	0
கமலநாதன்	1	8
நாகபூஷணம் தமிழ் நாவல்	0	12
வைத்திய புத்தகங்கள்.		
போகமுனிவர் சத்தகாண்டம்-7000	4	0
வைத்தியரத்தினச்சுருக்கம்	0	4
புலஸ்திய மகாரிஷி வாதத்திரம்-300	0	12
" 400	0	4

	ரூ.	அ.
அகஸ்தியமுனிவர் பூரண சூத்திரம் 216 பாடல்	0	[illegible]
தேரையர் வைத்தியம் 100 பாடல்	0	4
புலிப்பாணிவைத்தியம் 500பாடல்	0	6
பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200	1	0
ஊர்வசி வைத்திய சிட்சா	0	8
இரண்டாம் பாகம்	0	8
வைத்திய குறள் பழமொழி விளக்கம்-108	0	8
சோதிட புத்தகங்கள்.		
நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும்	0	12
வீமகவி பாட்டு உரை	1	0
சுகர்நாடி சோதிடம்	1	0
சோதிமாமுனிவர் சோதிட கேரளம்	0	12
சோதிடமுகூர்த்த விதானம்	0	12
டிராமா புத்தகங்கள்		
கோவிலன் சரித்திரம்	0	4
சாவித்திரி சரித்திரம்	0	4
நல்லதங்காள் சரித்திரம்	0	4
பவளக்கொடி சரித்திரம்	0	4
அல்லி சரித்திரம்	0	4
சதாரம் சரித்திரம்	0	4
கண்டிராஜன் சரித்திரம்	0	4
லங்காதகனம்	0	4
வள்ளியம்மை திருமணம்	0	4
இராமதாஸ் சரித்திரம்	0	4
மயில்ராவணன்சரித்திரம்	0	4
இந்துஸ்தான் பஜனைக்கீர்த்	0	4
லலிதாங்கி சரித்திரம்	0	4
குலேபகாவலி சரித்திரம்	0	4
ஞானசவுந்தரி சரித்திரம்	0	4

ஆசான் அன்னியில் 60-நாளில் ஆர்மோனியம் வாசிக்கலாம்
ஆர்மோனிய ஆசான் சங்கீத களஞ்சியம் அணா—2

...ட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,
189, தங்கசாலைத் தெரு, சென்னை.